Regeistered as a Newspaper    பக்கங்கள் 10    விலை ரூபா: 6.00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    கார்த்திகை 04    (19-11-93)    வெள்ளிக்கிழமை    ஓசை 274

## ஆண்டு இறுதித் தேர்வு பின்போடப்பட்டுள்ளது

இன்று தொடங்கவிருந்த ஆண்டு இறுதித் தேர்வுகள் பின்போடப்பட்டுள்ளன. அத் தேர்வுகள் பின்வரும் ஒழுங்கில் நடைபெறும். ஆண்டு 4, 5, 6, 7, தேர்வுகள் நவம்பர் மாதம் 29, 30, டிசம்பர் 01, 02 ஆம் திகதிகளில் நேரசூசியில் குறிப்பிட்ட ஒழுங்கின் படி நடைபெறும். ஆண்டு 8, 9, 10 வகுப்புகளுக்கான தேர்வுகள் டிசம்பர் 16, 17, 18, 20, 21ஆம் திகதிகளில் நேரசூசியில் குறிப்பிட்ட ஒழுங்கின்படி நடைபெறுமென பரீட்சைச் சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# ஐ. தே. கட்சி அரசாங்கம் மீது சிங்களவர் நம்பிக்கை இழப்பு

## பரீட்சை காகிதாதிகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் ஆறாம் திகதி தொடக்கம் நடைபெற இருக்கும் க.பொ.த. (சா/தர)ப் பரீட்சைக்கான யாழ். மாவட்ட பரீட்சை நிலையங்களிற்கான காகிதாதிகள் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

ஆவற்றுள் பரீட்சார்த்திக

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத் தேர்தல் அறிவிப்பு பற்றி பி. பி. ஸி.

(கொழும்பு)

**"பூநகரியில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட தோல்வியின் காரணமாக டி. பி. விஜேதுங்க அரசாங்கத்தின் மீது சிங்கள மக்களுக்கிருந்த நம்பிக்கை தளர்ந்துவிட்டது. இவ்வாறு தளர்ந்துவிட்ட நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும், வடக்கு கிழக்கில் ஜனநாயக அமைப்புக்கள் ஏற்படுத்தப்படவில்லை என்று எழுந்துள்ள கண்டனத்தையும் திசைதிருப்பவுமே அரசாங்கம் தொடர்ச்சியாக அடிக்கடி உள்ளூராட்சித் தேர்தலுக்கான அறிவிப்புக்களைச் செய்துவருகின்றது"**

இவ்வாறு சிறிலங்கா வானொலியிலும், ரூபவாகினியிலும் அடிக்கடி கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல்பற்றி அறிவிப்புக்கள்வெளிவருவது குறித்து பி. பி. ஸி கருத்து வெளியிட்டுள்ளது.

பி. பி. ஸி. மேலும்தெரிவிக்கையில்: சிறிலங்கா அரசு மனித உரிமைகளை மீறிவருகிறது என்று ஐக்கிய நாடுகள் குழு கடந்த ஆகஸ்ட் மாதம் நிறைவேற்ற முயற்சித்தது. அதை அரசு எப்படியோ இறுதி நேரத்தில் தடுத்து நிறுத்திவிட்டது. ஒக்டோபர் மாதம் உள்ளூராட்சித்தேர்தல் நடாத்தப்படும் என்று சமாதானம் கூறி மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்படாமல் தடுப்பதில் வெற்றி கண்டது. அத்துடன் ஐ. எம். எவ் என்ற பன்னாட்டு நிதியம் இனப்போருக்கு ஒரு தீர்வு கண்டாக வேண்டும் என்று அரசிடம் வலியுறுத்தியது.

இந்தப் பின்னணியில் பார்க்கும் போது அரசின் மேற்படி தேர்தல் அறிவிப்பு இவ்வாறான கண்டனங்களைத் திசை திருப்புவதற்கும் அரசு மீது மக்களுக்கு நம்பிக்கையை உரு

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தேர்தலுக்கான சூழல் உருவாகவில்லை

– பிரேமச்சந்திரன்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் முழுமையான அமைதி திரும்பவில்லை. மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை. இந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்துவது எப்படி? இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் திரு. சுரேஸ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; மட்டக்களப்பு மாவட்டத்தில் நகரப்பகுதிகளில் மூன்று நாட்களுக்கு மட்டுமே வீதிப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரின் அஸ்தி புலிகளால் ஒப்படைப்பு

பூநகர் முகாம் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் 187பேரின் உடலங்களை எரித்து விடுதலைப் புலிகள் சாம்பலை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர்.

சர்வதேச செஞ்சிலுவைக் குழு மூலம் 187 பிளாஸ்ரிக் பைகளில் வழங்கப்பட்ட சாம்பல் எந்தெந்த இராணுவத்தினருடையது என்பதற்கான குறியீடுகள் 45 பைகளில் மட்டுமே உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. இவற்றில் 5 இல் பூரண விபரங்கள் எழுதப்பட்டுள்ளது எனவும், மிகுதிப் பைகளில் குறியீடுகள் எதுவும் இல்லை என்றும் சிறிலங்கா இராணுவத் தரப்பை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் அறிவித்தது

## வாடகை மோட்டார்கார் உரிமையாளர் கவனத்துக்கு!

யாழ் மாவட்டத்தில் பயணிகளை வாடகைக்கு ஏற்றிச் சேவையில் ஈடுபடும் சகல மோட்டார்கார் உரிமையாளர்களும் அவற்றின் உரிமைச் சான்றிதழ்களுடன் எதாவதும் ஞாயிறுக்கிழமைக்குமுன்னர் தமிழீழ போக்குவரத்துப் பகுதி, யாழ் பஸ் நிலையக் காரியாலயத்தில் (கிளாலிப் பாதைச்சேவையில் ஈடுபடுத்துவதற்காக) தமது மோட்டார் கார்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறும், பதிவுசெய்யப்படாத கார்கள் சேவையில் ஈடுபடுத்தமுடியாதுஎன்ற ஒழுங்கு பேணப்படுகிறது எனவும் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## மாவீரர் நாளையிட்டு பந்தல்கள் அமைப்பு

(நமது நிருபர்)

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு வட்ட ரீதியாக பந்தல்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வட்டத்திற்கு ஒரு பந்தல் என்ற ரீதியில் மிக நீண்ட பந்தல் அமைக்கப்பட்டு சிவப்பு மஞ்சள் நிற வர்ணங்களால் அவை அலங்கரிக்கப்பட்டு அந்தந்த வட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்படவுள்ளன.

மாவீரர் வாரமான 7நாட்களும் இம் மாவீரர்களது உருவப் படங்களுக்கு மலர்தூவி ஈகைச்சுடரேற்றி மக்கள் அஞ்சலி செலுத்துவர். (ச)

# மன்னம்பிட்டி கிராமத்தில் 4 தமிழர் படுகொலை

மட்டக்களப்பு மாவட்டம் மன்னம்பிட்டி கிராமத்தில் சிறிலங்கா இராணுவத்தினரும் காடையரும் இணைந்து ஒரு பெண் உட்பட 4 பொது மக்களை சுட்டுக் கொன்றுள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் இவர்களைக் கடத்திச் சென்ற சிறிலங்கா படையினரும், காடையர்களும் இவர்களை சுட்டுக் கொன்றனர்.

நான்கு பிள்ளைகளின் தந்தையாகிய பூபாலபிள்ளை குழந்தைவேல், 33வயதுடைய குழந்தைவேல் ராணி, 45 வயதுடைய ஒன்பது பிள்ளைகளின் தந்தையாகிய நமசிவாயம், 29 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையாகிய கணபதிப்பிள்ளை சிவகுமார் ஆகியோரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

பூநகரியில் சிறிலங்கா இராணுவகடற்படைமுகாம்கள் தகர்க்கப்பட்டதற்குப் பழிவாங்கலாகவே இத்தாக்குதல் நடாத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## தாழப்பறந்த ஹெலி மீனவர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஆரியாலை கிழக்கு கடற்கரைப் பகுதியில் கடற்றொழிலாளர் மீது சிறிலங்கா வான்படையினர் உலங்கு வானூர்தி மூர்க்கத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

ஆரியாலை கிழக்கிற்கும் கௌதாரி முனைக்கும்

(2ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டில் மாவீரர் எழுச்சி வாரம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு

(நமது நிருபர்)

மாவீரர் எழுச்சிவாரம் யாழ் குடாநாடெங்கும் வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது.

மாவீரர் வாரத்தின் முதல் வாரம் மாவீரர் எழுச்சி வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு கடந்தசில வருடங்களாக தமிழீழ மக்களால் அனுஷ்டிக்கப்பட்டுவருவது தெரிந்ததே.

இவ் எழுச்சி வாரத்தில் மக்கள் அனைவரும் தமது வீடுகள், வளவுகள், வீதிகள் ஆகியவற்றை சுத்தம் செய்வதுடன், சமூக நிறுவனங்கள், வர்த்தகர்கள், பொது ஸ்தாபனங்கள் என்பன பிரதான வீதிகளிலும் சந்திகளிலும் மாவீரர் வளைவுகளையும், பதாகைகளையும் அமைத்து வருவதும் தெரிந்ததே.

வழமைபோல் இம் முறையும் யாழ். குடாநாட்டின் பெரும்பாலான இடங்களில் மக்கள் சிரமதானப் பணிகளிலும், வீதி வளைவுகளை அமைப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இதேவேளை வழமைபோல் இம்முறையும் வட்டரீதியாக மாவீரர் எழுச்சிவார கருத்தரங்குகளும், சிரமதானப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக இன்றுமாலை 7-30 மணிக்கு யாழ். வட்டத்தில் யாழ்மத்தி கற்குளம் ஸ்ரார் சனசமூக நிலையத்திலும், நல்லூர் வட்டத்தில் கொக்குவில் மேற்கு காந்தி சனசமூக நிலையத்திலும், கோப்பாய் வட்ட கருத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



வீரவேங்கை இராஜாதித்தன்

மட்டக்களப்பு மாவட்டம் ஆயித்தியமலைமாவலி ஆற்றுப் பகுதியில் 07-11-93 அன்று மாலை 5.15 மணியளவில் விடுதலைப் புலிகள் போராளிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை இராஜாதித்தன் (இமானுவேல் ரமேஸ், சேற்றுக்குடா, புதூர்) என்ற போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர்.

## வரி விளம்பரம்

**வேலை வாய்ப்பு**

சைனீஸ் உணவகத்திற்கு உணவு பரிமாறுவதற்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர். அனுபவமும் ஆற்றலும் உள்ளவர்கள் [இன்று] 19-11 93 திகதியில் காலை 10 00மணி முதல் 12.00 மணி வரை நேரில் சமுகம் தரவும். நியூ யாழ் சைனீஸ் 124, முதலாம் குறுக்குத்தெரு,யாழ்ப்பாணம். (6611)

**கால் நடை மருந்துகள் விற்பனைக்குண்டு**

மேற்படி மருந்து வகைகள் தேவைப்படுவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும். யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், திருநெல்வேலி கிழக்கு. (சி-7951)

**சோதிடம்**

ஜாதகம் எழுத—பலனறிய அதிர்ஷ்ட எண்களில் பெயர் வைக்க, விவாகப் பொருத்தம் பார்க்க வேலணை ஜோதிடர் V.Aசிவராசா 152-B அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம். (6627)

**சாயிபாபா போல் மற்றோர் அவதாரபுருஷர்**

தமிழ்நாடு சிவகங்கைச் சித்தர் ஸ்ரீமுத்துக்காமாட்சி சுவாமிகளின் அற்புதங்களும், வியாழ, சனி மாற்றப் பலாபலன்களும், எண்ஜோதிடமும் ரூ. 10/- விற்பனையாகின்றது பகவான் மருந்தகம், 221. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (6631)

## 'குமாரி' இன்றுவரும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கான ஒரு தொகுதி மண்ணெண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய் என்பனவற்றுடன் ''குமாரி'' கப்பல் இன்று பருத்தித்துறை வந்து சேருமென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கவட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கப்பலில் அநேகமாக தனியார்துறையினருக்கான பொருள்களே கூடுதலாக எடுத்துவரப்படுவதாகவும் தபால் பொதிகள் எதுவும் இக்கப்பலில் எடுத்துவரப்படவில்லை எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா) (நி)

## பரீட்சை ஒத்திவைப்பு

(நமது நிருபர்)

கணக்காய்வாளர் பதவிக்கான போட்டிப் பரீட்சை காலவரையறை இன்றி ஒத்திப் போடப்பட்டுள்ளது.

இப்போட்டிப் பரீட்சை இம்மாத இறுதிவாரம் கொழும்பில் நடைபெறவிருந்தது தெரிந்ததே. மேற்படி போட்டிப் பரீட்சை காலவரையறை இன்றி ஒத்திப் போடப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபருக்கு கிடைக்கப்பெற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

**தாழப்பறந்த**

இடையேயான கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டு இருந்த சுமார் 20க்கு மேற்பட்ட மீனவர் மீது நேற்று முன்தினம் சிறிலங்கா விமானப் படை உலங்கு வானூர்தி இத்தாக்குதல் நடத்தியது.

உலங்கு வானூர்தி தொடர்ந்து தாக்குதல் நடத்திக் கொண்டு தாழப்பறந்ததாகவும் பின்னர் தாக்குதல்களை மேற்கொண்டுவிட்டு மீண்டும் உயரப் பறந்து சென்றுள்ளதாவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

## யாழ். செயலகத்தை அரச அதிபர் பார்வையிட்டார்

(நமது நிருபர்)

சுப்பர்சொனிக்போர் விமானம் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலால் சேதமடைந்த யாழ் செயலகத்தை யாழ் அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் நேற்றுக் காலை பார்வையிட்டார்.

மேற்படி குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி யாழ் அரச அதிபர் காயமுற்று சிகிச்சை பெற்று வருவது தெரிந்ததே நேற்றுக்காலை செயலகத்திற்கு வந்த அரசாங்கஅதிபர் செயலகத்தின் பாதிப்பையும் தற்போது கீழ் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் தற்காலிக திருத்த வேலையையும் அவர் பார்வையிட்டார் (சி)


## தரமான உப்பு கிடைக்கவில்லை என்று கவலையா? கவலையை விடுங்கள்

வெண்மையான தரமான உப்பினை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

★ மொத்த விலை 7.50சதம்

★ சில்லறை விலை 8.00 ரூபா

தரமான உப்பினை பெற்றுக்கொள்ள நீங்கள் தவறாது நாட வேண்டிய இடம்:-

❋ தாயகம் பல் பொருள் அங்காடி
யாழ்ப்பாணம்

❋ உதயன் பல் பொருள் அங்காடி
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்

❋ தாயகம் பல் பொருள் அங்காடி
கொக்குவில்

❋ தாயகம் பல் பொருள் அங்காடி
சுன்னாகம்.

குறிப்பு: உப்பு தேவைப்படும் வியாபாரிகள் மேற்படி நிலையங்களுடன் தொடர்பு கொண்டால் உங்கள் வர்த்தக நிலைய வாசலில் கொண்டு வந்து தர ஒழுங்குகள் செய்யப்படும்.

சி/7954



## இடமாற்றம்

1993-11-12-ம் திகதி தொடக்கம் எமது தலைமை அலுவலகம் இல. 75/1, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் என்பதனை சகல வாடிக்கையாளர்களுக்கும், முகவர்களுக்கும், பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றோம.

பொதுமுகாமையாளர்

யாழ்/பகுதி தெ. ப. கூ. ச. கொத்தணி,
75/1, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழப்பாணம். (6622)



**பார்க்க... படிக்க... பாதுகாக்க...**



இம்மாத நங்கூரம் படியுங்கள்

சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும் (சி 7963)


## ஒன்றுபட வேண்டிய காலம் வந்துவிட்டது

விமல் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

'பயங்கரவாத' அச்சுறுத்தல் தொடர்ந்து நீடிப்பதால் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதென சுற்றாடல் மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் விமல் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் ஒத்திவைப்பு நேரத்தின் பொழுது கேட்கப்பட்ட கேள்விக்கு பிரதம மந்திரியின் சார்பில் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

பூநகரி முகாம் தாக்குதல் பற்றிய சகல விபரங்களையும் பிரதம மந்திரி பிறிதொரு தினத்தில் பாராளுமன்றத்திற்கு எடுத்துக்கூறுவார் என விமல் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'பயங்கரவாதத்தை' முறியடிப்பதற்காக அரசாங்கம் தன்னிடமுள்ள சகல வளங்களையும் ஒன்றுதிரட்டி மும்முரமாக முயற்சிசெய்கிறது பாதுகாப்பு அமைச்சராகவும் கடமையாற்றும் ஜனாதிபதியின் வழிகாட்டுதலில் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. அரசாங்கம் இந்த விடயத்தில் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பதை தற்சமயம் சபையில் விவாதிக்கப்படும் புதிய வரவு செலவுத்திட்டத்தை நோட்டமிட்டால் எளிதில் புரியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

'பயங்கரவாதத்தை' ஒழிப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க எதிர்க்கட்சியினர் முன்வந்தால் அது மனமுவந்து வரவேற்கப்படுமெனவும் அவர் கூறினார்.

'பயங்கரவாதத்தை' ஒழிக்கும் தேசிய முயற்சிக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியை மட்டுமன்றி இந்நாட்டிலுள்ள சகல ஜனநாயக குழுக்களையும் அரசாங்கம் இருகரம் நீட்டி அழைக்கிறது என்றார்.

## வீர அஞ்சலி

### 2-ம் லெப். சிவகுமாரன்

(குழந்தைவேலு சத்தியேந்திரா)

வரலாறு படைத்த பூநகரி முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 2 ம் லெப் சிவகுமாரன் (குழந்தைவேலு சத்தியேந்திரா) அவர்கட்கு எமது கண்ணீர்க் காணிக்கை.

''நெல்சன் வீதி'',
சிறுவிளான்,
இளவாலை.

–நெல்சன் குடும்பம்

(6632)

## நினைவு கூருகின்றோம்... 1993-11-19

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார் அடம்பன் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

1985ஆம் ஆண்டு தமிழகத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மோட்டார் சைக்கிள் விபத்தில் எமைப் பிரிந்த,

**கோபி** (மகாதேவன் இளங்கோ - ''திகிரி'' தும்பளை - பருத்தித்துறை-யாழ்)

1987ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 03 குழந்தைகள் உட்பட 04 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டுகாரைநகரில்இந்தியப்படையினரின் முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**சக்கரை** (தம்பு துரைராசா - காரைநகர் - யாழ்)

**கோபி** (ஆறுமுகம் தவபாலன் - களபூமி, காரைநகர் -யாழ்)

கிளிநொச்சிப் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவன்.

1990ஆம் ஆண்டு மாவிட்டபுரம், தச்சன்காட்டுச் சந்திப் பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.மணிமேகன்** (இராசையா அனுராம்-சோற்றுப் பிடிச்சி, சண்டிலிப்பாய் தெற்கு-யாழ்)

பருத்தித்துறை, புலோலிப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஒரு பெண்.

1992ஆம் ஆண்டு வவுனியா, செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவக் காவலரண் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மேஜர் ஆதித்தன்** (சின்னப்பு ஜெயதாஸ் - தங்கபுரம், அலம்பில்-முல்லைத்தீவு)

**மேஜர் சிலம்பரசன்/கீசிங்** (தனபாலசிங்கம் சிவபாலேஸ்வரன்-சாஸ்திரிகூழாங்குளம்-வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/7955)

# நகர்த்திச் செல்லும் தலைவனை எழுதிச் செல்லும் வரலாறு

எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலும் காணமுடியாத பல்வேறுபட்ட விசேடமான குணவியல்புகளைக் கொண்டது தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது இப்போது மேலும் உறுதியாக்கப்பட்டுவிட்டது. அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தால் வெளியிடப்பட்ட 'எனது மக்களின் விடுதலைக்காக' என்கிற தலைவர் பிரபாகரனின் சிந்தனைத் தொகுப்பு பற்றியே இங்கு குறிப்பிடுகிறோம். 300பக்கங்கட்குமேல் கொண்ட இந்நூல் அறிக்கை வடிவமாக, நேர்காணல் வடிவமாக, கடித வடிவமாக, மேடைப்பேச்சு வடிவமாக எனப் பலதரப்பட்ட வடிவில் அமைந்துள்ளது. மிக வித்தியாசமான முறையில்ஒரு அதி முக்கியமான வரலாற்று காலகட்டத்தில் காலப் பொருத்தமாக தமிழினம் ஒரு கணம் நிதானித்து முன்னைய வரலாறுகளை மீள் நினைவூட்டி முனைப்புடன் முன் செல்ல வேண்டிய சூழ்நிலையில் வெளியாகியுள்ளது. அதுமட்டுமன்றி மலை விழுங்கி மகாதேவன் போல வரலாற்றுண்மைகளை விழுங்கி பேரினவாத பொய்களைக் கூச்சலாக வெளிப்படுத்தும் இன்றைய சிங்களத் தலைமைக்கு தக்க பதிலடி கொடுக்கும் வண்ணம் வரலாற்றுண்மைகளை இந்நூல் வெளிப்படுத்துகின்றது. 'ஜே ஆர். ஒருஉண்மையான பௌத்தராக இருந்திருப்பின் நான் ஆயுதம் ஏந்தியிருக்க நேர்ந்திராது' என்கிற தலைவரின் காத்திரமான பதில் (1984 மார்ச் சண்டே இதழில் வெளியான பேட்டி) இதற்குத் தக்க சான்றாகும். இவற்றையெல்லாம் விட முக்கியமானது என்னவென்றால் போராட்டம் நிகழ்த்தப்படும் போதே அது வழிநடத்தப்படும் முதன்மை நபராலே அது வரலாற்றாக்கப்படும் விதம் தான்; இது வேறு எங்கும் காணமுடியாதது ஏனென்றால் தலைவரின் சிந்தனை வடிவங்களே செயல் வடிவமாகி அச்செயல் வடிவமே தலைவர் வாயிலாக சொல் வடிவம் பெறுவதால், இந்நாடு பெறுமதியானவரலாற்று ஆவணம் உருவாகிவிட்டது. இங்கே இன்னொரு விடயம் சுட்டிக்காட்டப்படவேண்டும். ஏனென்றால் பொதுவாக தமிழ் நாட்டில் என்றால் என்ன, குறிப்பாக தமிழீழத்தில் என்றால் என்ன, தனது வரலாற்றையே செப்பமாக காலத்தொகுப்பாக குறித்து வைக்கும் பழக்கமின்மை தமிழனின் பெருத்த குறைபாடாக அறிவாளரால் சொல்லப்பட்டுள்ளது இங்கே இப்போது அக்குறைபாடு இல்லாமல் போகிறது. இனிவரும் சந்ததி இப்போதுள்ள சந்ததி மேல் குறைசொல்ல வழியில்லாமல் போகின்றது.

''வரலாறு எனது வழிகாட்டி எனத்தொடங்கி'' சத்தியத்தின் அடிப்படையில் சமூகநீதி மலரவேண்டும் என தர்க்க ரீதியாக முடிந்தும் இத்தொகுப்பு நூல் 1984-ம் ஆண்டிலிருந்து 1993-ம் ஆண்டு வரையான காலப்பகுதி உள்ளடக்கும் முக்கிய நிகழ்வுகளை விளக்கி நிற்கிறது. அத்தோடன்றி அக்காலகட்டத்தில் உடனடியாக வெளியிட முடியாதிருந்த பல உண்மைத் தகவல்களை முக்கிய அரசியல் மடல்களை தமிழ் மக்கள்முன் வெளிப்படையாக முன்வைக்கின்றது. குறிப்பாக எம்மக்கள் மீது அநீதியாகஇந்தியப் படையால் தொடுக்கப்பட்ட போர் பற்றி எம் ஜி ஆர் அவர்கட்கு தலைவர்எழுதிய 11-10-87-ம் திகதிய மடல் அதுபோல முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதப்பட்ட பல மடல்கள், ஐ நா. செயலாளருக்கு, அணிசேரா அமைப்பிற்கு, இந்தியப் படையின் கொடூரம் குறித்து போரை நிறுத்த வேண்டிய அவசியம் குறித்து எழுதப்பட்ட இராஜதந்திர வகையிலான மடல்கள் முக்கியமானவை. இவையெல்லாம் இன்று வெறும் மடல்கள் அல்ல. தமிழீழ மக்கள் தமது விடுதலையை வென்றெடுக்க வேண்டியதற்காக தார்மீக நியாயங்களை நிறுவியவையாக விடுதலைப் போர் எவ்வாறு தவிர்க்க முடியாதது ஆகிவிட்டது என்பதற்கான ஆணித்தரமான சான்றுகளை முன்வைப்பவையாகி விட்டன. அவ்வகையில் 1980-ன் பின்னான தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் எவ்விதம் படிப்படியாக தமிழீழ மக்களின் விடுதலைக்கான போராட்டமாக, பாங்காகப் பரிணமித்தது பற்றி அறிய முடியும்.

இத்தொகுப்பு நூலின் தனித்த சிறப்பியல்பு தலைவர் பிரபாகரனின் சிந்தனையில் படிமுறை வளர்ச்சியை - தாக்கம் முதலிலேயே எடுக்கப்பட்ட முடிவுகளின் இன்றைய பொருத்தத்தை - எதிர்காலத்தை முற்கூட்டியே பிசகின்றி கணிக்கும் ஆற்றலை - அணுகு முறைகளை அறிய வழிவகுப்பதேயாகும், இதே போன்ற பல உண்மைகள் இந்நூலுக்குள் விரவிக் கிடக்கின்றன. இந்நூலை 1987க்கு முன்னான காலப்பகுதி, 87- 90க்கும் இடைப்பட்ட பகுதி, 90க்கு பிற்பட்ட பகுதியென மூன்றாக வகுக்க முடிகிறது. முதற்பகுதி தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் காரணங்களை அதன் நியாயத்தை இலட்சியத்திற்கு பாதகமேற்படாமல் இந்திய உறவினை அதன் தலையீட்டை கையாள முயன்றமை பற்றி பல செய்திகள் உள்ளன. இரண்டாவது காலகட்டத்தில் இங்கு வந்த இந்தியப் படை வழிதவறி, சிங்களச் சதிக்கு இரையானது பற்றி அப்போரை நிறுத்த மேற்கொண்ட முயற்சிகள் பற்றிய தகவல்களைக் கொண்டுள்ளது, ஆனால் இவற்றிலெல்லாம் முக்கியமானதாக, மூன்றாம் காலகட்டப் பகுதி அமைகின்றது. முன்னிரு கட்டங்களை விட வேறுபட்டதாக தலைவரின் தன்னுணர்வுகளை, பட்டறிவின் பண்பினை, பல விடயங்கள் பற்றி அவாவி நிற்கும் அவரது ஆவல்களை, ஒரு பெரும் போரை நடாத்தும் அதேசமயம் தமிழ்மக்களின் பல்துறை சார் வளர்ச்சிக்காக தமிழ்த் தேசத்தின் கட்டுக்கோப்பான எதிர்கால விருத்திக்கான அவரது எண்ணப்பாங்குகளை அறிய முடிகின்றது.

இவை எல்லாவற்றையும் விட மிகமுக்கியமானது, தமிழ் மக்கள் அனைவருமே மிக்க விருப்புடன் அறியமுற்படும் அறிய விரும்பும் தலைவரின் ஆளுமை, அவரது தனித்த எண்ணங்கள் பற்றிய பூரண வடிவத்தையும், இந்நூல் அளிப்பதுதான். அவ்வகையில் இது ஒரு ஆய்வுக்குரிய அதிசய நூலாக அமையப் போகிறது. ஏனெனில் தலைவரின் தனித்த இயல்பான இயற்கையின் இயல்பானவரலாற்றுவிதிகளை அறிந்து அவ்விதிகளையே நெறிப்படுத்தி அதேசமயம் புதியவரலாறு படைக்கும் அவரின் உள்ளுணர்வே இங்கு முக்கியம் அல்லவா! இந்நூலுக்குள் அதற்கான சான்றுகள் பரந்து கிடக்கின்றன. 1984ம் ஆண்டு மார்ச் மாதம் சண்டே இதழில் வெளிவந்த செவ்வியில் '' இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது தத்துவாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி'' என்பது தலைவர் எந்த முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட தத்துவ வரம்பிற்குள்ளும் தன்னை அடைத்துக் கொள்ளாமையை புலப்படுத்தும். அதேபோல் ''கெரில்லா போர் முறையை சிலர் இப்போது கண்டித்து விமரிசனம் செய்கின்றனர், நாம் கெரில்லா போராட்டத்தை மக்கள் மத்தியில் படிப்படியாக நிலைநிறுத்தி மக்களின் பங்களிப்போடு விரிவுபடுத்தி வெகுசன யுத்தமாக்கும் கொள்கை திட்டத்தையே பின்பற்றுகிறோம்'' என்பதும் ''போர்க்களத்தில் குதியுங்கள்; எமது பொது எதிரிக்கு எதிராக ஒன்றிணைந்து போராடுவோம்; களத்திலே எதிரியை சந்திக்கும் போதே ஒற்றுமை, நல்லெண்ணம் பிறக்கும்' என 1984ம் ஆண்டு மே மாதம் வெளியிடப்பட்ட தலைவரின் அறிக்கை இரு பெரும்வினாக்கட்கு விடையை அன்றே கூறி இன்று அது நிதர்சன உண்மையானதை காட்டுகிறது ''என்னைதிருப்திப்படுத்துவது இலேசான காரியமல்ல; இன்னும் சிறப்பாகசெய்யமுடியும்: என யூனியர் விகடனுக்கான 86 மே மாத செவ்வியில் செய்வன திருந்தச் செய்யும் தனது இயல்பை வெளிக்காட்டியமை - அதேபோல 86-ம் ஆண்டு நியூஸ் வீக் செவ்வியில் ''நான் தனிப்பட்ட முறையில் சொந்த முயற்சியில் பயிற்சிபெற்றேன். நான் எனது இயல்பான திறனாற்றல் மூலமே செயற்படுகிறேன்'' என்றமை - அதே செவ்வியில் இந்திய இராணுவத் தலையீடு அனாவசியம் என திட்டவட்டமாகக் கூறியமை, இங்கு குறிப்பிட்டுக் காட்ட வேண்டியவை. அதுபோலவே புகழ்பெற்ற 1987 யூலை சுதுமலைப் பேச்சின் போது ''சிங்கள இனவாதப் பூதம் இல. - இந்திய ஒப்பந்தத்தை விரைவில் விழுங்கி விடும் காலம் வெகுதூரத்தில் இல்லை'' என்றமையில் எங்கும் எல்லாச் செவ்விகளிலும் அறிக்கைகளிலும் அடிநாதமாக, தமிழீழ இலட்சியத்தை மேன்மைப்படுத்தும் இயல்பினைக் காணமுடியும். இவற்றினை எல்லாம் விட 1986 செப்டெம்பர் மாத இந்து செய்தித்தாளில் வெளிவந்து மிக்கபரபரப்பை ஊட்டிய தலைவரது பேட்டியின் இறுதியில் ''என் இயல்பான போக்கையும் சொல்கிறேன்- உண்மையான அரசியலில் நான் எப்போதும் பேச்சுக்கு தருவது குறைந்தளவு முக்கியத்துவமே, செயலால் வளர்ந்த பின்பு தான் நாம் பேசத் தொடங்குதல் வேண்டும்...... சொல்லுக்கு முன்பே எப்போதும் செயல் இருக்க வேண்டும். இச் செயல்தான் எம்மையும் மக்களையும் இறுகப் பிணைத்தது. இராணுவம் உங்களை தாக்க வருகிறது - நாங்கள் எதிர்த்து தாக்குவோம். உங்களை பாதுகாப்போம் என்று நாம் சொன்னால் - சொன்னதை செயல்படுத்தும் போதுதான் மக்கள் எம் மீது நம்பிக்கை வைக்கிறார்கள் இதனால்தான் நாம் இராணுவ நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்துகிறோம்'' இப்பேட்டியில் இந்து பத்திரிகை ஆசிரியர் ராம் ''தலைவரின் முன் - நாம் தோற்றுப்போனோம்அவர்பால் ஈர்க்கப்பட்டு விட்டோம்'' எனப் பின்னர் கூற நேரிட்டது. எனவே இவ்வாறாக வாசிப்போர் மனதிலே பல தரப்பட்ட உணர்வுகளை தோற்றுவிக்கக் கூடிய இத்தொகுப்பு நூல் உண்மையிலே அதிசயமானதாகும். ஏனென்றால் இரத்தமும் சதையும் திரம்பிய உயிர்ப்போராட்டம் ஒன்றின் பிரதிபலிப்பு அல்லவா இவை?



**பாலகுமாரன்**

# ஒடுக்கப்பட்டோருக்கான இலக்கியத்தின் தாய் நாடு தலை நிமிர்கின்றது

வீதியில் ஒரு மனிதன் வருகிறான். அவன் தன் கழுத்தில் ஒரு மண்பாண்டத்தைக் கட்டி தொங்க விட்டுக் கொண்டிருக்கிறான்.

ஏன் இது? எதற்காக இந்த மண்பாண்டம் கழுத்தில் ......

அவன் எச்சில் நிலத்தில் விழக் கூடாது. நிலம் அழுக்காகி விடும். அசுத்தமாகி விடும்.

அதோ...

இன்னொருமனிதன் சென்று கொண்டிருக்கிறான். அவன் பின்புறம் துடைப்பம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.

ஏன் இது? எதற்காக இந்த துடைப்பம்?

அம்மனிதனின் பாதங்கள் பட்ட பாதை அசுத்தமாகி விடும். காலடிச் சுவடுகள் அழிக்கப்பட வேண்டும்.

சாதிய ரீதியில் பிற்படுத்தப்பட்டோர் என்று சொல்லப்படுகின்ற மனிதன் இவ்வாறு தான் ஒடுக்கப்பட்டிருக்கிறான். கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறான். மிக மோசமாக நசுக்கப்பட்டிருக்கிறான்.

இந்த ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் இருந்துதான் 'தலித்' என்ற இலக்கியம் முளைவிட்டது

இந்தியாவில் மகாராஷ்டிர மாநிலம்தான் தலித் இலக்கியத்தின் தாய்த்தேசம் இங்கு ஒடுக்கப்பட்டவர்களினால் தான் தலித் இலக்கியம் பிறப்பெடுத்தது.

இந்த வகையான இலக்கியம் புத்தரின் காலத்தில் தோன்றியதாகக் கூறப்படுகின்றபோதி

**மனிதர்கள் எவரும்**
**ஒடுக்கப்படுவதற்கு**
**உரியவர்கள் அல்ல**
**என்ற சேதி**
**உலகத்திற்கு சொல்லப்பட வேண்டும் !**

லும் அதன்பின் வந்த சிலஅறிஞர்கள் இதன் முன்னோடிகள் என்று சொல்லப்படுகின்றது.

ஆனாலும், மகாத்மா பூலே (1828 - 90) என்பவரும்' பேராசிரியர் எஸ். எம்மாதே (1886 . 1957) என்பவருமே இந்த இலக்கியத்தின் தேவையைஉணர்ந்து செயற்பட்டவர்கள் என்று பல கட்டுரையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இருப்பினும் சிலர் பாபா சாகேப் அம்பேத்காரின் அரசியல் சமூக தத்துவங்களில் கவரப்பட்டு தலித் இலக்கிய பிரசவிப்பில் ஈடுபட்டனர்.

அம்பேத்கார் ஒடுக்கப்பட்டவர்களின் கல்விக்காக 1945-ம் ஆண்டில் பம்பாயில் 'மக்கள் கல்விக் கழகம்' என்ற ஒன்றை ஆரம்பித்தார். அக்கல்லூரியிலிருந்து பட்டம் பெற்று, புறப்பட்டு வந்த முதல் அணி 'தலித் இலக்கிய சங்கம்' என்ற ஒன்றை உருவாக்கி இந்தவகையான இலக்கிய படைப்புகளில் ஈடுபட்டது என்று 'தலித் இலக்கியம் போக்கும் வரலாறும்' என்ற நூலில் அர் ஜூன் டாங்ளே என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

**வவுனியா**
**திலீபன்**

பிராமணர்கள்மற்றும் மேல் தட்டு வர்க்கத்தினரால் படைக்கப்பட்டு வந்த இலக்கியங்கள் யாவும் அம்மண்ணின் பிரச்சினைகளைப்பேசவில்லை அங்குள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் வேதனைகளை வெளிப்படுத்தவில்லை.

(8ஆம் பக்கம் பார்க்க)

# புத்துயிர்ப்புக்கு முயலும் விளை நிலங்கள்;

யாழ் குடாநாட்டை ஊடறுத்து நிற்கும், கடலேரியின், மருங்கிலுள்ள நிலங்களை உவர்த்தன்மை தாக்கத்திலிருந்து காப்பாற்றும் நோக்கில் பல முன்னெடுப்புக்கள் இன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தொண்டமானாறு தொடடு அரியாலை வரையில் நீண்டு காணப்படும் உப்பாற்றின் தாக்கங்களையும், உப்பாறு எவ்விதம், விளை நிலங்களை ஊறுபடுத்த ஆரம்பித்தது என்பது பற்றியும் பெறப்பட்ட தகவல்கள் இங்கே தரப்படுகின்றன.

இது தொடர்பாக, கூட்டுறவு மாகாண வங்கியின் முன்னாள் நிர்வாக முகாமையாளரும், உப்பாற்றின் தன்மைகளை நன்கறிந்து கொண்டவரும் இன்று, விளைநிலங்களை மீளவுயிர்ப்புச் செய்வதில் துடிப்போடு இருப்பவருமான திரு க. இ. குமாரசாமி அவர்களைச் சந்தித்தபோது அவர் விபரிக்கையில்.

விளைபொருட்களை இலகுவாக கொண்டு செல்லும் வகையில் அக்கால மன்னர்களினால் அமைக்கப்பட்ட இவ் உப்பாற்றின் முக்கியத்துவம் 1940 ம் ஆண்டளவில்நீர்ப்பாசனத்துறையில் அதிகாரியாக இருந்த கே. பாலசிங்கம் என்பவரால் புதிய நோக்கில்முன் வைக்கப்பட்டது. மகாவலி கங்கையை வடக்கே கொண்டு வருவதன் மூலம் ஆனையிறவுக்கடல் உப்பாறு வடமராட்சிக் கடல் என மூன்றையும் உள்ளடக்கிய நீர்ப்பாசனத் திட்டமொன்று அவரால் முன்னெடுக்க முயற்சிக்கப்பட்ட தாயினும் பின் அரசியல் தலையீடுகளால் அத்திட்டம் பின் தள்ளப்பட்டது.

இந்நிலையில் 1948-ம் ஆண்டளவில் திரு வெப் என்பவரால் உப்பாற்றின் தொண்டமானாறு அரியாலை புக வெடு பாதைகள் இரண்டையும் மூடி, அதன்மூலம் மிதமிஞ்சிய மழைநீரைவெளியேற்றவும் கடல் நீர் உள்ளே வராமல் தடுக்கவும்காற்றாடிகளின் மூலம் உப்புநீரை அகற்றவும் ஆழம்குறைந்த கிணறுகளை வெட்டி நீர்ப்பாசனத்திற்கு உபயோகிக்கவும் திட்டமிடப்பட்டது. அப்போது டி.ஆர் ஓவாக இருந்த திரு முருகேசம்பிள்ளை என்பவரின் முயற்சியினாலும் அரசினால் நிதி ஒதுக்கப்பட்டு தொண்டமானாறிலும் அரியாலையிலும் காற்றாடிகள் நிறுவப்பட்டு 5 அடி உயரமான அணைகளும் கட்டப்பட்டன.

ரகுராம்

இதன் காரணமாக, ஆவரங்கால் பகுதியில் தரிசு நிலமான சிறிய பகுதி தோட்ட நிலமானதுடன், கரணவாய்ப் பகுதிகளிலும் உப்புத்தன்மை குறைந்தது. இந்நிலையில், (1949—1955) உப்பாற்றிலே மீன்பிடித் தொழில் புரிவோரும், உப்பு விளைவித்து பெறுபவர்களும் பலத்த எதிர்ப்பினைத்தெரிவித்தனர். இதனால் பழையபடி உப்பு நீர், உப்பாற்றுக்குத் திறந்து விடப்பட்டது. இதனால் எதிர்பார்த்தபடி உவர்நிலங்களை விளை நிலங்களாக மாற்ற முடியவில்லை.

மேலும் முன்னர் மழை காலங்களில் உப்பாற்றின் உப்புநீரானது விளை நிலங்களுக்குள் புதந்தாலும் உடனடியாக அது வடிந்து சென்றது. அணைகள் கட்டியமையினால் மழைநீரும் உப்புநீரும் கலந்ததினால், விளைநிலங்களில் தேங்கிய நீர், நீண்ட தூரஇடைவெளிகளில் அமைக்கப்பட்ட மதகுகளினாலேயே அகற்றப்பட முடிந்தது. இதன் காரணமாக விளை நிலங்களில் தேங்கி நின்ற உப்புநீர், வடிந்தோட மார்க்கமில்லாத நிலையில், விளைநிலங்கள் உவர்த்தன்மை கொண்டவையாக மாறின. இதன்போது ஏறக்குறைய 1955-ம் ஆண்டளவில் இருந்து நடவு செய்யப்பட்ட நெல் இனங்கள் நுனி சருகி இறந்துபோயின. 1960-ம் ஆண்டளவில் முற்றாகவே நெற்பயிர்கள் நாசமாகும் நிலை உருவாகியது.

இந்நிலையில் முன்னர் டி. ஆர். ஓ. ஆக இருந்த திரு. முருகேசம் பிள்ளை, மீன்பிடியாளர்களையும், விவசாயிகளையும் ஒன்றுசேர்த்து வல்லையிலும். கைதடியிலும் உப்பாற்றை அடைப்பதெனவும், தொண்டமானாற்றுப் பகுதியில் மீன்பிடியை மேற்கொள்வதெனவும், இடைப்பட்ட உப்பாற்றுப் பகுதியை நன்னீராக்கி, பாதிக்கப்பட்ட நிலங்களை மீளவும் விளை நிலங்களாக்க முயற்சித்தார். எனினும் இம் முயற்சி தோல்வியிலேயே முடிவடைந்தது.

தொடர்ந்து வந்த காலப் பகுதியில், வன்னிப் பகுதிகளுக்கு, காடழித்து கமம் செய்வதற்கான வாய்ப்புகள் கிடைத்தமையினால் பெருமளவு விவசாயிகள் கைவிட்ட நிலையில் இந்நிலப்பகுதி தரிசாகத் தொடங்கியது.

1973 ம ஆண்டளவில், வலிகிழக்கு கிராம முன்னேற்றச் சங்கங்களின் சமாசம், உவர் நில மாதிரி நெற்பயிர்ச் செய்கையில். நாட்டம் கொள்ள ஆரம்பித்தது.

எனினும் இம்முயற்சிகள் பூரண வெற்றியளிககவில்லை தொடர்ந்து பல காலம், கவனிக்கப்படாமலிருந்த இப்பகுதியில் மீண்டும் 90களின் ஆரம்பத்தில் மீளவும் முயற்சிகள் ஆரமபிக்கப்பட்டுள்ளன.

உப்பாற்றின் மூலம் பாதிக்கப்பட்ட பிரதேசம் ஆறு பகுதிகளாக பிரிக்கப்படுகின்றன. பருத்தித்துறை யாழ் வீதியிலிருந்து உப்பாறு நோக்கிச்செல்லும பாங்கில் கீழ்வரும் பிரிவுகளில் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- குடியிருப்புகள்
- தோட்ட நிலம்
- கைவிடப்பட்ட வயல் நிலம் (800 ஏக்கர்)
- புத்தரவைப் பகுதி
- சதுப்பு நிலம்
- உப்பாறு

என இப்பகுதிகள் அமைகின்றன முன்னர் கைவிடப்பட்ட வயல் நிலப்பகுதியிலேயே மாதிரி நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சதுப்பு நிலப்பகுதியில் 40-ம் ஆண்டளவில் தாழை மரங்கள் பெருமளவில் இருந்தன. இவை உவர்த்தன்மையை உறிஞ்சும் வல்லமையுடையன. எனினும் யுத்த விமான தளமொன்றும் அக்காலப் பகுதியில் கோப்பாய் பகுதியில் அமைப்பதற்காக இம் மரங்கள் யாவும் அழிக்கப்பட்டன. எனினும் மழைநீர் தேங்குவதால் இப்பகுதி பின்னர் கைவிடப்பட்டது. இப்படியான நிகழ்வுகளும் இங்குள்ள விளை நிலங்கள், உவர் தன்மையாக் மாறக் காரணமாயின,

1970-ம் ஆண்டளவிலும் உப்பாற்றின் வரம்புகளில் பனை விதைகள், கோப்பாய் பகுதி விவசாயிகளாலும் கிராம முன்னேற்ற சங்கங்களாலும் பெருமளவில் நாட்டப்பட்டன. எனினும் இப்பகுதி மேய்ச்சல் நிலமாகையால், இவைகால்நடைகளால் அழிந்துபோயின எனினும் இன்றும் காணப்படும் பனங்கூடல்கள் சில இப்பகுதி உவர்த்தன்மையையும் தாங்கி வளர்ந்துள்ளதை எடுத்துக் காட்டுகின்றன. அவ்வகையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரின் ஒத்துழைப்போடு கருவேலம், சவுக்கு, பனை போன்றன இப்பகுதிகளில் இன்று நடப்பட்டு வருகின்றன. புத்தரவைப் பகுதிகளிலும் புல்வளர்ப்பதற்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகி உள்ளன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# உலகத் தகவல் தொடர்பு துறையில் மூன்றிலொன்று ஒருவர் கையில்!

உலகளாவிய செய்தித் தகவல் பரிமாற்றத்தில் முடிசூடா மன்னனாகத் திகழ்பவர் ரூபர்ட் முர்தோக் எனும் அவுஸ்ரேலியர் செய்மதிகளினூடாக உலகம் முழுவதும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்பிவரும் 'ஸரார் ரிவி' எனும் அமைப்பின் 63 6 வீத பங்குகளை இவர் வாங்கியுள்ளார்.

யார் இந்த முர்தோக் என்றால் அமெரிக்கா முதல் அவுஸ்ரேலியா வரை செய்தித் தாள்கள், வானொலி, தொலைக்காட்சி, செய்மதி மூலம் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி சேவை என்று அனைத்துத் தகவல் தொடர்புத்துறையிலும் ஒரு உலக மகாசக்தியாக இவர் உருவாகி வருகிறார்.

ஒவ்வொரு நாளும் உலகமெங்கும் தொலைக்காட்சிபார்ப்பவர்களில் 52 சதவீதமானவர்கள் இவரது தொலைக்காட்சி ஒளிபரப்புக்களையே பார்க்கிறார்கள்.

உலகமெங்கும் ஆங்கில செய்தித் தாள்களைப் படிப்பவர்கள் 19 சதவீதம் பேர் முர்தோக் நிறுவனங்களிலிருந்து வரும் [செய்தித்தாள்களையே படிக்கின்றனர்.

இவரது ''நியூஸ்கோப்பரேஷன்'' எனும் நிறுவனம் 150 செய்தித் தாள்களையும், பல தொலைக்காட்சி, வானொலி நிலையங்களையும் நடாத்தி வருகிறது.

''ட்வென்டியத் செஞ்சரி பொக்ஸ்'', 'பொக்ஸ் ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம்' மற்றும் அதனோடு இணைந்த நிலையங்களின் மூலம் வட அமெரிக்காமுழுவதும் இவரது தொலைக்காட்சி நிலையங்களே கொடிகட்டிப் பறக்கின்றன.

அமெரிக்காவில் மிகப் பிரபலமான 'நியூயோர்க்' பத்திரிகையும், சிகாகோவிலிருந்து வெளிவரும் 'சண்ரைம்ஸ்' பத்திரிகையும் இவருடையது. ஆங்கில நூல்வெளியீட்டு நிறுவனங்களில் மிகப் பெரிய நிறுவனமான 'ஹாபர் கொலின்ஸில்' பாதிக்கு மேல் இவரது பங்கே.

ஐரோப்பாவில் ,இங்கிலாந்திலிருந்து ஒளிபரப்பிவரும் இவரது ''ஸ்கை டெலிவிசன்'' ஐரோப்பா முழுமைக்கும் பதினைந்து செனல்களில் ஒளிபரப்பு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது,

டயனா - சாள்ஸ் உறவில் விரிசல் பற்றிய தகவல்களையும், இங்கிலாந்து, அமைச்சரவையையே ஒரு கலக்குக் கலக்கிய இந்திய அழகி 'பமீலா' விவகாரங்களையும் விலாவாரியாக வெளியிட்ட 'தசண்' 'தரைம்ஸ், செய்தித்தாள்கள் இவருடையவைதான் 'கிர்ச் கோப்பிரேசன்'' மற்றும் ஒலிபரப்பு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு ஒலிபரப்புச் செய்வதன் மூலம் 10 கோடி மக்களிடம் அவரது ஒலிபரப்புக்கள் போய்ச் சேருகின்றன.

முர்தோக் பிறந்த இடமான அவுஸ்ரேலியாவின் தலை சிறந்த செய்தித்தாள் ''அவுஸ்ரேலியன்'' என்பது இவருடையது மேலும் ''செவிண் நெற்வேர்க்'' எனும் தொலைக்காட்சி நிறுவனத்தின் 15 சதவீத உரிமையும் இவருடையது விரைவில் அவுஸ்ரேலியா கண்டம் முழுவதும் சென்றடையும் வண்ணம் ஒளிபரப்பு ஒன்றைத் துவங்கவுள்ளார்.

இவ்வாறாக உலகம் முழுவதும் தனது தகவல் தொடர்பு ஆளுகை வரம்பை ரூபர்ட் முர்தோக் விரிவுபடுத்தி வருகிறார். 'உலகக் கிராமம்' எனும் கருத்தினை நிஜமாக்கிக காட்டி வருபவர் இவர் இவரை உலகமாக செய்தி நிறுவன முதலைகளான ரொபர்ட் மாக்ஸ்வெல், லார்ட் பீவர் புருக, ராம்நாத் கோயங்கா, லார்ட் நார்த் போன்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்துவிட்டனர். ஆனால் எந்த ஒப்புவமைக்கும் பொருந்தாத தனித்தன்மை வாய்ந்தவராக இவர் திகழ்கிறார்.

கொலை, கொள்ளை, பாலியல், வன்முறை இதுவே அவரது வியாபார யுக்தி எனினும் தனது தாய் நாடான 'அவுஸ்திரேலியாவில் நடாத்திவரும் அவுஸ்ரேலியன்' என்னும்செய்தித்தாள்மிகத்தரம்வாய்ந்தபத்திரிகை என ஏற்றுக் கொள்ளப்படுகிறது விளம்பரங்களில் புதுமை இவரது வெற்றிக்கு மற்றொருகாரணம்

முர்தோக்கின் தந்தை சர் கெயித் முர்தோக் முதலாவது உலகப்போரின் போது போர் நிருபராகப் பணியாற்றியவர் அவுஸ்ரேலியாவின் மெல்பர்ன் ஹெறரால்ட்' செய்தித்தாள் குடும்பத்தின் தலைமை நிர்வாகியாக கெயித் முர்தோக் பணியாற்றி வந்தார், அவுஸ்ரேலியா நாட்டில் பிறந்த ரூபர்ட் முர்தோக் அங்கிருந்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் எம் ஏ முடித்துவிட்டு லண்டனில் இருந்து வெளிவரும் 'டெய்லி எக்ஸ்பிறஸ்' பத்திரிகையில் இரண்டாண்டு காலம் துணை ஆசிரியராக பணியாற்றி பத்திரிகை தொழிலை கற்றுக் கொண்டவர்.

1954 ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவுககு திருமபிவந்துதனது தகப்பனார் நடத்தி வந்த 'நியூஸ்', 'சண்டேமெயில்' ஆகிய இரண்டு சிறிய செய்தித் தாள்களை நடாத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அப்பொழுது அந்த செய்தித் தாள்கள் மிகக் குறைந்த விற்பனையில் எப்போதாவது நின்றுவிடலாம் என்ற நிலையில தள்ளாடிக் கொண்டிருந்தன. கொலை, கொள்ளை, பரபரப்புபோன்ற அம்சங்களை அச்செய்தித்தாளில் சேர்த்து, அச்செய்தித் தாள்களை தூக்கி நிறுத்தினார். இதிலிருந்து சிறிது சிறிதாக பல்வேறு நிறுவனங்களையும் விலைக்கு வாங்கத் தொடங்கினார்.

பின்னர் ஹொலிவுட் பக்கம் அவர் கவனம் திரும்பியது 1985 ல் ''ட்வன்ரியத் செஞ்சுரி பொக்ஸ்'' எனும் நிறுவனத்தை வாங்கினார், இப்போது ஆசியாவிலும் ஆபிரிககாவிலும் அதிகப்பேர் பார்க்கும் 'ஸ்ரார் ரீவி' யில் பெரும் பங்கை வாங்கியதன் மூலம் உலகமக்கள் தொகையில் மூன்றில் ஒருபங்கினர் முர்தோக்கின் தொடர்பு சாதனங்களின் செல்வாக்கிற்கு உட்பட்டுள்ளனர்,

நன்றி புதிய பார்வை

**2-ம் லெப். சிவகுமாரன்**
**(குழந்தைவேலு சததியேந்திரா)**

13-11-93 அன்று பூநகரி முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட எமது கல்வி நிறுவன ஆசிரியர் நா. குழந்தைவேலு அவர்களின் அன்பு மகன் 2 ம் லெப் சிவகுமாரன் அவர்கட்கும் அவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய போராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இபக்குனர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
வீ்னா கல்வி நிறுவனம்,
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7962)

## சிறுகதை

# வேப்பமரம்

**ந. குகதாசன்**

சின்னப்புக் கிழவர் செத்துப் போனார். கொள்ளி வைத்து, எரித்துச் சாம்பலாக்கியாகி விட்டது. இனி அவரை ஊரே மெல்ல மெல்ல மறந்து விடும். வருடத்திற்கு ஒரு முறை, அதுவும் சில வேளை தான் அவரது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் மட்டும் நினைவு படுத்தக் கூடும். ஆனால், எனக்கு குளிர்நிழல் பரப்பி நிற்கும் பெரிய வேப்ப மரங்களைக் காணும்போதெல்லாம் சின்னப்புக் கிழவர் நினைவில் வந்து போவார்.

சின்னப்புக் கிழவரின் வீடு எங்கள் வீட்டுக்கு நேரெதிர். கிடுகு வேலிகள் எல்லாம் மதில்களாக மாறத் தொடங்கிய அந்த நாட்களில் சின்னப்புக் கிழவரின் பனை ஓலையால் வேய்ந்த கொட்டில் வீடும், கிடுகு வேலியும் சவுதி றியாலால், அஸ்பெஸ்ட்ரஸ் கூரை கொண்ட கல்வீடும், மதிலுமாக மாறின. அவரது கடைசிமகன் அப்போது போனவன் தான் பிறகு ஊர்ப்பக்கம் வரவேயில்லை. இப்போது சுவிசில் பிராங் உழைக்கிறான். போன மாதமளவில் தான் அவனுக்கு இங்கிருந்து மணப்பெண் அனுப்பி வைக்கப்பட்டாள். போய்ச் சேர்ந்தது பற்றி இன்னும் தகவல் இல்லையாம். அன்று செத்த வீட்டில் கதைத்துக் கொண்டார்கள்.

புதிதாக வீடு கட்டுவதற்கு நிலையம் பார்த்தபோதுஅந்த இடத்தில் நின்ற பதினாறு பனைகளையும்தறிக்க வேண்டி வந்து விட்டது கிழவர் அதற்கு ஒப்புக் கொள்ள மாட்டார். அதனால், அவரது மூத்த மகன் கிழவரை கொஞ்ச நாளைக்கு இடம்மாற்ற ஏற்பாடு பண்ணினான். கிழவர் இரண்டு நாட்கள்தான் இடம் மாறி தன் மகளின் வீட்டில் இருந்தார். "இஞ்ச இருக்கேலாது வீட்டுக்குள்ள அவியுது; சுத்த விட்டுக் காத்துக் காட்டினால், மூச்சு முட்டி மனிசன் செத்துப் போவான். நான் போறன்" - புறப்பட்டவர் மூன்றாம் நாள்வீட்டு வளவுக்குள் நுழைந்த போது பதினாறு பனைகளும் தறியுண்டு கிடக்க, கிழவர் வெறிகொண்டார். அவரைச் சமாதானப் படுத்துவது பெரும் பாடாகிப் போய்விட்டது. அவரது மூத்த மகனுக்கு வீடு கட்டி முடித்ததும் அந்த வீட்டுக்குள் போகக் கூட அவர் மறுத்து விட்டார். வீட்டின் பக்கத்தில் கிழவருக்கு ஒரு கொட்டில் வீடு போட்டுக் கொடுத்து விட்டார்கள், கிழவர் பாதி நேரம் அந்தக்கொட்டிலுக்குள், மீதி நேரம் வீட்டின் முன்னே நின்ற அந்த கிழட்டு வேப்ப மர நிழலின் கீழ்- கிழவர் வேப்ப மர நிழலின் கீழிருந்து தான் ஊருக்கே வைத்தியம் சொல்லுவார். விசக்கடியா? காய்ச்சலா? இல்லை என்னதான் வருத்தம் என்றாலும் அவர் மருந்து சொல்லுவார். வேர், தண்டு. இலை, பூ, காய், பழம் என்று ஒவ்வொரு கொடி, செடி மரம், எல்லாம் தேட வைத்து விடுவார் கிழவருக்கு எண்பத்தைந்து வயது என்றால் நம்புவது கொஞ்சம் கஷ்டம்தான். அந்த வயதிலும் தன்னால் செய்ய முடிந்த வேலைகளை எல்லாம் செய்துகொண்டுதானிருப்பார். வீட்டின் பின் பக்கம் விதவிதமான மரங்கள், செடிகள், கொடிகள், கொஞ்சம் அவதானித்துப் பார்த்தால் அதே இன கொடிகளையும், செடிகளையும் வீதியோரங்களில் கண்ட ஞாபகம் வரலாம். கிழவர் "வைத்தியம் சொல்லுங்கள்" என்று வருபவர்களிடம் பணம்வாங்குவதில்லை தன் தோட்டத்தில் இல்லாத ஏதாவது ஒரு செடி, கொடியை அடையாளம் சொல்லி விடுவார். அதை தேடிப் பிடித்துக் கொண்டுவந்தால்போதும் கிழவருக்கு பெரிய சந்தோசம் தேடி வந்து கொடுக்கும் செடியைபாடுபட்டு வளர்த்து எடுத்து விடுவார். யாருக்காவது வைத்தியம் செய்ய அந்தச் செடியின் இலையோ, பூவோ தேவைப்பட்டால் கிழவர் உடனே பிடுங்கிக் கொடுப்பார்.

கிழவர் நிழல் வாங்கும் அந்த வேப்ப மரத்தையும் நல்ல விலைக்கு கேட்டு வந்தார்கள். அதையும் தறித்து கிழவரை ஆத்திரப்படுத்த அவரது மூத்த மகன் விரும்பவில்லை. அதனால், வேப்ப மரமும் தன்ஆயுளை இன்னும் கொஞ்சம் என்று நீட்டி வைத்துக் கொண்டது அன்று வேப்ப மரத்தின் கீழிருந்து கிழவருடன் கதைப்பது சுவாரசியமானது. எத்தனையோ கதைகள் சொல்லுவார். அதில் மரம், மனிதன், மதம் என்று எத்தனையோ விடயங்கள் வரும். அவரை ஒரு அனுபவக் கலைக்களஞ்சியம் என்றுகூடச் சொல்லலாம். தனக்குத்தெரிந்ததை பிறருக்குச் சொல்வதில் அவர் எப்போதுமே திருப்தி கொண்டவர்.

அரவாய்க் கடிப்பகை என்றால் வேப்பிலை. மாறன்தார் மாலுகம், பிரபத்திரம், பித்த சாந்தி. பிசிகம், பிசாசுப்பிரியம், பிசாசி, பார்வதம், பார்வதி, பாரவதம், உச்சிரகந்தி, கடிப்பகை, சேரமுட்டி, கைப்பு, கோடரவாலி, சர்வசாதம் இவையெல்லாம் என்ன தெரியுமா? வேம்பிற்குள்ள மறு பெயர்கள்; சித்தர்களின் பரிபாசையில். இதையெல்லாம் கிழவர் தான் சொல்லித் தந்தார். ஏதோ அந்தக் கிழவரைப்பற்றி ஊரவர்களும், அவர் வீட்டவரும் தெரிந்து கொண்டது கொஞ்சம் தான்

வேப்பமர நிழலின் கீழ்தான் கிழவருக்கு உயிர் போய்ச் சேர்ந்தது. பொழுது சாய்ந்த பின்னர் தான் கிழவர் செத்து விட்டது வீட்டாருக்குத்தெரிய வந்தது, வழமை போலவே வேப்ப மரத்தின் கீழ் சாக்குக் கட்டிலில் நித்திரை கொள்கிறார் என்று நினைத்துக் கொண்டு இருந்து விட்டார்கள். கிழவரின் கடைசி விருப்பப்படியே கிழவரின் உடல் வேப்பமரத்தின் கீழே வைக்கப்பட்டு இறுதிச் சடங்குகள் செய்து, சுடலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அந்தியேட்டியை தடபுடலாகத் தான் நடத்தினார்கள். அந்தியேட்டிக்கு காட் அடித்தார்கள் வந்தவர்களுக்கு கிழவரின் படம் போட்டு ஒரு புத்தகம், தேவாரம், திருவாசகம் திருவிசைப் பாவோடு கொடுத்தார்கள், வீரகேசரி வார மலரில் கலர்ப்படம் போட்டு, "எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் எம்மை அன்போடும், பண்போடும் வளர்த்து, வழிகாட்டி ... "— தகவல் கொடுத்திருந்தான்கிழவரின் கடைசி மகன் சுவிசிலிருந்து. நானும் அந்தியேட்டிக்கும் போனேன். கிழவரின் கொட்டில் இருந்த இடம் தெரியாமல்மறைந்துவிட்டது. அது தான் போகட்டும் என்றால், அந்தக் கிழட்டு வேப்ப மரத்தின் அடியைக்கூடதேடித் தான் கண்டு பிடிக்கவேண்டிய நிலை. அந்தவேப்ப மரத்தைக் காசாக்கி விட்டார்கள். வேப்ப மரம் இருந்த இடத்தில் அந்தியேட்டிக்காக போட்ட தகரக் கொட்டகை அதன் கீழ் நீல நிறம் உதிர்க்கத் தொடங்கியிருந்த இரும்புக் கதிரைகளில் இருந்தவர்கள் வியர்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு புறத்தில் சமையல் வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன கிழட்டு வேப்பமரத்திலிருந்து கழித்தொதுக்கப்பட்ட கிளைகள் விளாசி எரிய கிழவருக்கு படைப்பதற்காகவும் சமைத்தார்கள் வீட்டின் பின்னே கிழவரின் மூலிகைத் தோட்டம் மூளியாகப் போகிறேன் என்று சொன்னது.

சின்னப்புக் கிழவர் செத்துப் போனார் கொள்ளி வைத்து எரித்துச் சாம்பலாக்கியாகி விட்டது. அந்தியேட்டியும்முடிந்துவிட்டதுஇனி அவரைமெல்ல மெல்ல ஊரே மறந்து விடும் வருடத்திற்கு ஒருமுறை அதுவும் சில வேளைதான் அவரது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் மட்டும் நினைவுபடுத்தக்கூடும் ஆனால் எனக்கு குளிர் நிழல் பரப்பி நிற்கும் பெரிய வேப்ப மரங்களைக்காணும் போதெல்லாம் சின்னப்புக் கிழவர் நினைவில் வந்து போவார்.

# சதைக்குவியலுக்குள் உறவினரை தேடியவர்கள்!

**து. சசிகரன்**

திடீரெனக் கேட்ட குண்டு வெடிப்புச்சத்தத்தைத் தொடர்ந்து அபயக் குரல்கள் கேட்டன. நாலாபுறமும் இருந்து விரைந்த மக்கள் கட்டடத்தைச் சூழ்ந்து கொண்டனர். சிதறிக்கிடந்த வாயில்களினூடாக உள்ளே நுழைந்தபோது கூரைகள் உட்பட கட்டடத்தின் பெரும்பாலான பகுதிகள் சேதமடைந்திருந்ததுடன் எஞ்சிய சுவர்களிலே இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அருகருகே இரத்தத்துடன் ஒட்டிய தலைமுடிகள் தொங்கிக்கொண்டிருந்தன. நிலத்திலே சிதறிய உடல் பாகங்கள் கால்களிலே ஒட்டின.

பதற்றமடைந்த மக்கள் அவசரஅவசரமாக இடிபாடுகளை அகற்றத் தொடங்கினர். மழை தூறிக்கொண்டிருந்தது. உடைந்து தூளாகிப் பறந்த கட்டடத்தின் சுண்ணாம்புத் தூள்கள் மழை நீருடன் கலந்து சுண்ணாம்புச் சுதைபோல காணப்பட்டது. இச்சுதையை மக்கள் கைகளால் அள்ளிக் கொண்டிருந்தனர். அங்கே இடிபாடுகளின் இடையிடையே சிதறிய சதைப்பிண்டங்கள் காணப்பட்டன. புதைபொருள் ஆராய்ச்சியில் கண்டெடுக்கப்படுவது போல் செபமாலைகளும் பைபிள்களும் இரத்தம் தோய்ந்த நிலையில் இடிபாடுகளுக்கிடையில் தென்பட்டன. இதனை அடுத்து அந்தப்பகுதி இடிபாடுகள் அகற்றப்பட்ட போது சிதறிய நிலையில் உடல்கள் காணப்பட்டன. தலைகள், கைகள், கால்கள் மற்றும் சிதைவுற்ற பகுதிகள் என உடல் உறுப்புக்கள் தனித்தனியே மீட்டெடுக்கப்பட்டு கடகங்களில் சேகரிக்கப்பட்டு தனியான ஓரிடத்தில் குவிக்கப்பட்டன. சுமார் மூன்று அடி உயரக் குவியலாக மனித உடல்களின் சிதைவுகள் காட்சியளித்தன. இத்தகைய கோர சம்பவம் அண்மையில் இந்திய மாநிலமான மகாராஷ்டிராவில் நிகழ்ந்த பூகம்பத்தன் கொடூரம் என யாரும் எண்ணிவிட வேண்டாம். இது கடந்த சனிக்கிழமை சிறிலங்கா விமானப் படைகளின்குண்டுவீச்சு விமானங்கள்புனித யாகப்பர் ஆலயம் மீது நடாத்திய குண்டுவீச்சின் கொடூர விளைவுகளே.

அன்றையதினம் காலை ஆலயவழிபாட்டிற்கென வந்த பக்தர்கள்மீது சிறிலங்கா படையினர் தமது கையாலாகாத் தனத்தை குண்டுகளால் வெளிப்படுத்தினர். பத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் அடையாளம் காணமுடியாத அளவிற்கு தூள்தூளாக சிதறிப் பலியாகியதுடன் இருபத்திஐந்திற்கு மேற்பட்ட சிறுவர்கள் குழந்தைகள், வயோதிபர் எனபலதரப்பட்டோரும் படுகாயமடைந்ததும் யாவரும் அறிந்ததே.

135 வருடகாலப் பழமை வாய்ந்ததும் கம்பீரமாக நிமிர்ந்து நின்ற இப்புனித யாகப்பர் ஆலயம் இன்று உருக்குலைந்த நிலையில் பாழடைந்து கிடப்பது அனைத்து உலகத்தினருக்கும் வேதனை தரும் ஒன்றாகவுள்ளது

சம்பவதினம் காலை வழமை போல் பூசைகள் நடைபெறும் என எண்ணியே படையினர் தாக்குதலை நடத்தியுள்ளனர். ஆனால் அதிர்ஷ்டவசமாக அன்றைய தினம் பூசை அருகிலிருந்த மற்றைய ஆலயத்தில் நடைபெற்றதால் பலநூற்றுக் கணக்கான உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டதாக அங்கு நின்ற ஒருவர் சொன்னார்.

இத்தாக்குதலை அடுத்து இடிபாடுகளுக்குள்ளிருந்து மீட்டெடுக்கப்பட்ட சதைப்பிண்டங்களைக் கொண்டு பலியானவர்களை அடையாளம் காண முடியாத நிலையில் உறவினர்களும், மக்களும் பரிதவித்தனர். அங்கு மலைபோல் காட்சியளித்த சதைப்பிண்டங்களைக் கிளறி இறந்தவர்களை அடையாளம் காண்பதில் உறவினர்களும் பொது மக்களும் ஈடுபட்டிருந்தமை துயரான காட்சியாக இருந்தது.

இக்கோர சம்பவத்தில் சிக்கியாழ் மாநகர சபை ஊழியர் ஒருவரும் பலியாகியிருந்தார். இவரது உடல் அடையாளம் காணமுடியாத அளவிற்கு சிதறியிருந்ததால் உரிமை கோரப்படாது கிடந்த சைக்கிளைக் கொண்டே இவரும் இதன்போது பலியாகியிருக்க வேண்டும் என உறவினர்களால் ஊகிக்கப்பட்டது இவ் இளைஞர் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்கும் தொட்டிக்கு நீர்நிரப்ப வந்தவர் எனவும் விமானம் வருவதைக்கண்டதும் சைக்கிளைப் போட்டு விட்டு ஆலயத்திற்குள் தஞ்சமடைந்தார் எனவும் நம்பப்படுகிறது.

சிலர் இடிபாடுகளில் கிடைத்த உடல் உறுப்புக்களை அடையாளம் காணும் முயற்சியிலும், சிலர் உடைத் துண்டுகளைக் கொண்டு உறவினரை அடையாளம் காணவும் முயன்றனர்.

இறுதியில் அடையாளம் காணப்பட்ட உடலுறுப்புகள் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்ட பின் எஞ்சிய ஒருதொகுதி சதைக் குவியல் ஒரு சவப்பெட்டியில் இடப்பட்டு செபம்செய்யப்பட்டபின் சேமக்காலையில் புதைக்கப்பட்டது.

இதேபோன்றதோர் கோர நிகழ்வு கடந்த சில மாதங்களின் முன் கல்வியங்காட்டுப் பகுதியில் நடந்திருந்தது. காலைவேளை வீதிகளில் சென்ற பாதசாரிகள் மீது சுப்பர்சொனி குண்டுகளை வீசியதில் பலர் பலியாகினர். இதன்போது உடற்கூறுகள்பல பகுதிகளிலும்சிதறிக்கிடந்தன. இதனால் பள்ளிசென்ற தனது குழந்தையைக் காணாது தவித்த தாய் பிள்ளையின் பாடசாலை உபகரணங்கள் ஏதாவது அப்பகுதியில் கிடக்கின்றதா என்பதை தேடியது இன்றும் கண்முன்னே நிற்கிறது. இவ்வாறு இறந்த தமது உறவினரை அடையாளம் காண்பதே மிகவும் சிரமமாக இருக்கும் அளவிற்கு மனித உயிர்கள் விமானக் குண்டுவீச்சால் சிதறடிக்கப்படுகின்றன.

## கல்வாரி நோக்கி

நிலவு பட்டு நீண்ட நாட்கள்
நெருப்பு மழையால்... எங்கள்
தேசம் நிறைந்து போனது...
ஆனாலும்...
தணல் மழையுள்
அக்கினிக் குஞ்சுகள்...
தாகம் தீர்க்குது... ஆம்
வாழப் பழகிக் கொண்டோம்.
கொடும் குண்டு மழையிலும்
குளித்து மகிழ
துணிந்து விட்டோம்...

சிலுவை சுமக்கிறோம்... ஆம்...
மரணச் சிலுவையேந்தி
மலையேறுகிறோம்.
முள் முடி சூடி...
மூச்சிரைக்க நடக்கிறோம்
கல்வாரி மலையிலில்லை... ஒரு
காலத்தின் மேல்...

-அடம்பனூர் இச. திருமாறன்

## யாழ்ப்பாண மாவட்ட மக்கள் வங்கி கிளைகளிலுள்ள எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர் (தமிழ்/ஆங்கிலம்) பதவிகளுக்கான போட்டிப்பரீட்சை

யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ள மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஆண் பெண் இருபாலாரிடமிருந்தும் யாழ்ப்பாண மக்கள் வங்கிப் பிராந்திய முகாமையாளரால் 30. 11. 1993 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தகைமைகள்/நிபந்தனைகள் வருமாறு:-

எழுதுவினைஞர்

1. க.பொ.த.ப (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் தமிழ், எண்கணிதம்/ கணிதம்/ வர்த்தக கணிதம் அடங்கலாக ஐந்து திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2. வயது.- விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18க்கும் 35க்கும் இடையில் இருத்தல் வேண்டும்.

சுருக்கெழுத்தாளர்:- தமிழ்/ஆங்கிலம்

1. க.பொ த (சாதாரண தரம்) பரீட்சையில் தமிழ்/ ஆங்கிலம் பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2. வயது:- விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18க்கும் 35க்கும் இடையில் இருத்தல் வேண்டும்.

நிபந்தனைகள்:-

அ) விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் மட்டும் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையலுவலகம்,
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

ஆ) பரீட்சைக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 150/- மேற்சொல்லப்பட்ட அலுவலகத்திலும், யாழ்ப்பாணமாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிக்கிளைகளிலும் செலுத்தப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இ) விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஈ) மாதிரி விண்ணப்பப் படிவம்.

### யாழ். மாவட்ட மக்கள் வங்கி எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர் (தமிழ்/ஆங்கிலம்) பதவிக்கான விண்ணப்பம்

1) முழுப்பெயர்:-
2) பால்:-
3) முகவரி:-
4) பிறந்த திகதி:-
5) 30. 11. 1993 அன்று வயது;-
வருடம்:- மாதம்:- நாள்:-
6) கல்வித் தகைமைகள்:-
க பொ.த ப. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களும் பெறுபேறுகளும் (ஆண்டு, சுட்டிலக்கம் அடங்கலாக.)
7) க.பொ.த (உயர் தரம்) சித்தியெய்திய பாடங்களும். பெறுபேறுகளும்(ஆண்டு, சுட்டிலக்கம் அடங்கலாக)

திகதி.-

விண்ணப்பதாரரின் கையொப்பம்

(சி-7953)

நம்பிக்கை! நாணயம்!! உத்தரவாதம்!!!

❋ சிற்றிஷன் கஸியோ கைக்கடிகாரங்கள்
❋ வீடியோ ஓடியோ கசெற் மற்றும் பிளிப்றோல்கள்
❋ கசற்றேடியோ, வீடியோடெக், கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள்
❋ ஒறிஜினல் மக்ஸல் மணிக்கூட்டு பற்றறிகள்
❋ புரட்சிப் பாடல்கள் தத்துவப்பாடல்களை தரமான முறையில் பதிவு செய்பவர்கள்

மற்றும்

உங்கள் எலக்றோனிக் பொருள்களை கொள்வனவு செய்பவர்கள்

கைக்கடிகாரங்கள் மற்றும் றேடியோ, கசற்செற், டெக், ரீவிக்களை உத்தரவாதத்துடன் திருத்தி கொடுப்பவர்கள்

தொடர்புகளுக்கு

மின்வளம்

இல.81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7959)

## புத்துயிர்ப்பு

மாதிரி நெற்பயிர்ச் செய்கை திட்டத்திற்கு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம், யாழ் பல்கலைக்கழகம், உதவி அரச அதிபர் பிரிவு என பல வகையிலும் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெற்றுவருகின்றன என்றார் திரு. குமாரசாமி

நன்னீர் மீன் வளர்ப்பு, மிகப் பரிச்சயமாயுள்ள இக் காலப் பகுதியில், உப்பாற்றை ஆங்காங்கு மறித்து நீர்த்தேக்கங்கள் அமைப்பதன் மூலம், விவசாயிகளுக்கும், மீன்பிடியாளர்க்கும் நன்மை பயக்கச் செய்யும் திட்டமொன்றும் ஆலோசனையிலுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

பரீட்சார்த்த நெற்பயிர்ச் செய்கையில், ஏ. ரி 353, ஏ. ரி-402, பி. ஜி-350 எச்-4 என்னும் நெல் இனங்கள் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகக் கூறிய, திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த திரு. ஈஸ்வரபட்சம், உவர்த்தன்மையை அளவிடுவது பற்றியும் கூறினார். மின்கடத்து திறனைக் கொண்டு மண்ணிலுள்ள உப்புக்களின் செறிவு விகிதம் துணியப்படுகிறது. அவ்வகையில் மின் கடத்துதிறனானது ஒன்றிலும் குறைவாக இருப்பின் அது உவரற்ற நிலமெனவும், ஒன்றிலும் அதிகமெனின் அது உவர்த்தன்மை அதிகம் கொண்ட நிலமாகும் எனவும் கூறினார்.

பரீட்சார்த்த செய்கைக்குச் சாதகமாகவே, இதுவரை நிலைமைகள் இருக்கின்றன. மழை நீரும் சீராகக் கிடைக்கின்றது. எதிர்வரும் மார்ச் மாதமளவில், அறுவடை எதிர்பார்த்த பலனைத்தருமாயின், அதே வழிமுறைகளைப் பின்பற்றி, தொடரும் ஆண்டுகளிலும், விவசாயிகளைப்பயிரிடுமாறு தூண்ட முடியும். நிலம் வறட்சியடையுமாயின், மயிர்த்துழைத் தன்மையினால் உப்புநீர் மேலெழலாம். இதனால், தொடர்ந்தும் நீர்ப்பாய்ச்சலுக்கான தேவையும் இருப்பதாக அவர் கூறுகின்றார்.

எது, எப்படியிருப்பினும் பயனற்றுக் கிடந்த எம் வளமொன்று, மீள உயிர்ப்பித்தலுக்கான, பல வகைகளிலும் முயற்சிகளை உள்வாங்கி வருகிறது. இம்முயற்சிகள் வெற்றியளிக்குமாயின் பலர் பயனடைய வாய்ப்பு உண்டு என்றே கூறலாம்.

## பனை அபிவிருத்திச் சபை
## பதவி வெற்றிடம்

பனை அபிவிருத்திச் சபையில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பொது முகாமையாளர்

தகைமைகள்;

(அ) பட்டப் பின் படிப்பு அல்லது வேளாண்மை விஞ்ஞானத்திலோ அன்றி உயிரியல் இரசாயனத்திலோ டிப்ளோமாவுடன் ஒரு விஞ்ஞானப் பாடத்தைக் கொண்டிருப்பதோடு 10 வருட சிரேஷ்ட நிறைவேற்றும் தரத்தில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

(ஆ) வயதெல்லை: 30 — 45 வரை

(இ) சம்பள அளவுத்திட்டம்: 95,400—10x3000—125400/-

2. சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர்

தகைமைகள்;

(அ) சந்தைப்படுத்தற்துறையில் 3 வருட அனுபவத்துடன் ஒரு பல்கலைக்கழகப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) வயதெல்லை: 30 — 45 வரை

(இ) சம்பள அளவுத் திட்டம்: 46,740 — 10x1,560-62,340/-

அரச கூட்டுத்தாபன, சபை உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்கள / ஸ்தாபனத்தின் / சபையின் தலைவர்களினூடாக 15-12-93க்கு முன்கீழ்க் கண்ட முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை
தேசிய வீடமைப்புச் செயலகம்

(சி-7960)

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் அத்திவாரமாக அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுனரும் சைவப்பெருவள்ளலருமான சேர். பொன். இராமநாதன் அவர்களின்

## நினைவு தினவிழா
## 19-11-1993

யாழ் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் அதிகாலை நூற்றெட்டுச் சங்காபிஷேகம் நடைபெறும். பின்னர் காலை 8.30 மணி அளவில் யாழ் பல்கலைக்கழக சபா மண்டபத்தில் அமைந்துள்ள சேர். பொன். இராமநாதனின் திருவுருவப் படத்திற்கு, யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் மாலைஅணிவித்து மரியாதை செலுத்துவார். இவ்வைபவம் தொடர்பாக மாலை 3-00 மணி தொடக்கம் நடைபெறவிருந்த நிகழ்ச்சிகள் யாவும் நமது பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள இழப்புகள் காரணமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

இங்ஙனம்
இந்து மன்றம்

(சி-7952)

# மனிதனைத் தேடும் மனிதன்

## பிரம்மஞானி

ஆதி மனிதன், தனது உலகானுபவத்தை அர்த்தமுள்ள சப்தங்களாக வார்த்தைகளில் உருவகித்து, பேசும் ஆற்றல்பெற்று, சுயமாகச் சிந்திக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே அவனிடம் அந்தக் கேள்வி பிறந்தது.

கேள்விகளுக்கு எல்லாம் மூலக் கேள்வியாக, வாழ்வியக்கத்தின் அர்த்தத்தையே தொட்டுநிற்கும் கேள்வியாக, ஆதிமனிதன் தன்னை நோக்கி அந்த வினாவை எழுப்பினான்.

'நான் யார்?'

எல்லையற்ற பிரபஞ்சத்தின் எங்கோ ஒரு மூலையிலிருந்து திசை தெரியாது தவித்த மானிடத்தின் அவலக்குரலாக அந்தக் கேள்வி எழுந்தது

அந்தக்கேள்வி பிறந்த கணத்திலிருந்து இன்றுவரை, ஒரு நீண்ட முடிவில்லாத சுயவிசாரணைத் தேடுதலாக மனிதன் தன்னைத்தானே தேடிக் கொண்டிருக்கிறான். அந்தத்தேடுதல் இன்னும் முடியவில்லை.

அன்றிலிருந்துஇன்றுவரை, ஓயாது ஓடிக்கொண்டிருக்கும் காலநதி இந்தப் பூமியின் முகத்தையே மாற்றிவிட்டது. நாகரிகங்கள் தோன்றி, வளர்ந்து, சிதைந்து அவற்றின் புதைகுழியிலிருந்து ஒரு புதிய உலகம் பிறந்துவிட்டது. படிப்படியாக பௌதிக உலகின் சூட்சும முடிச்சுக்களை மனிதன்அவிழ்த்துவிட்டான். என்றுமில்லாவாறு மனித அறிவு வளர்ந்தது. விண்ணுலக அண்டத்தின் விசாலம் தொட்டு, நுண்ணுலக அணுவின் மூலம் வரை, இயற்கையின் எண்ணிலாப் புதிர்களை எல்லாம் மனிதன் அறிந்துகொண்டான்ஆனால் மனிதன் தன்னைப்பற்றி இன்னும் அறிந்துகொள்ளவில்லை. மனிதன் யார் எனற கேள்வியைப் பின்தொடரும் தேடுதல் ஒரு முடிவில்லாத தொடர் கதையாக இன்னும் தொடர்கிறது.

அன்றொருகாலம், கிரேக்க நாட்டில் ஒரு வயோதிப தத்துவ ஞானி இருந்தார். அவருக்குப் பைத்தியம். பிடித்துவிட்டதாக மக்கள் கருதினர். அந்த மனிதர் இரவு வேளையில், ஒரு கையில் ஊன்றுகோலுடனும் மறுகையில் ஒரு விளக்குடனும் அதென்ஸ். நகர வீதிகளில் யாரையோ தேடி அலைந்துகொண்டிருந்தார். தனக்கு எதிரே வரும் மனிதர்களை வழிமறித்து, கைவிளக்கை உயர்த்திப்பிடித்து அவர்களது முகத்தை உன்னிப்பாக நோட்டமிடுவார். இப்படியாக தினமும், இரவில் விளக்கு வெளிச்சத்தில் மாறிமாறி மனித முகங்களை தரிசிப்பதில் அவரது காலம் கழிந்தது. இவரது தொல்லைதாங்காது ஒரு நாள் அந்த நகரவாசிகள் அவரிடம் சென்று ''யாரைத் தேடுகிறீர்கள்'' என்று கேட்டனர்.

''நான் ஒரு மனிதனைத் தேடிக் கொண்டிருக்கிறேன்'' என்று அந்தத் தத்துவஞானி பதில் சொன்னார்.

பொய்யான, போலியான மனிதர்கள் மத்தியில் ஒரு உண்மையான மனிதனை அந்தஞானி தேடிக்கொண்டிருந்தாராம்.

இப்படியாக மனிதனை மனிதன் தேடிய விசித்திரமான வரலாறு நீண்ட காலத்திற்கு முன்னரே தொடங்கி விட்டது.

ஆதியிலிருந்தே மனிதன் ஒரு கனவு கண்டான். இந்தப் பூவுலக வாழ்வின் நிர்ப்பந்தங்களுக்கு அப்பால் நிச்சயமற்ற தன்மைகளுக்கு அப்பால், துன்பத்தின் அழுத்தத்திற்கு அப்பால், காலத்தின் எல்லைக்கு அப்பால், சாவின் நியதிக்கு அப்பால்,இல்லாமை என்ற சூன்யத்திற்கு அப்பால், ஒரு நித்திய சீவியத்தை, பேரானந்த பரவசத்தில் சதாலயித்திருக்கும் சிரஞ்சீவியான வாழ்வை கனவு கண்டான். மனிதனின் இந்தக்கனவிலிருந்து ஒரு கருத்துலகம் பிறந்தது. அழியாத ஆன்மா என்றும், ஆவி உலகம் என்றும், அடுத்த பிறவி என்றும், சுவர்க்கம் என்றும், நரகம் என்றும் இந்தப் பூவுலகத்திற்கு அப்பால், நாம் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, மடியும் இந்த நிஜவுலகத்திற்கு அப்பால், நாம் தொட்டுணர்ந்து பட்டறிந்துகொள்ளும் இந்தப் புறவுலகத்திற்கு அப்பால், மனிதன் ஒரு பூடகமான உலகை கற்பிதம்செய்துகொண்டான். இந்தக் கற்பனாவாதம் இயற்கைக்குப் பதிலாக ஒரு இந்திரலோகத்தைப் படைத்தது. மனிதன் ஒரு அந்நிய உலகத்தின் அபூர்வப் பிறவியாக மாற்றப்பட்டான் இதனால் பூமியில் புதைந்து கிடந்த மனிதனின் பூர்வீக வேர் பிடுங்கி எறியப்பட்டது. மனிதனின் மனக்குகை இருளுக்குள், அடிமன பாதாளத்திற்குள், ஆதியும் அந்தமுமற்ற அழியாத ஆன்மா ஒன்று புகுந்துகொண்டது.

அந்த ஆன்மத்தின் இரகசியத்தை மனிதன் தேடத்தொடங்கினான். இதனால் புதிய கேள்விகள் பிறந்தன.

'நான் யார்?, என்ற மையக் கேள்வியுடன் 'நான் எங்கிருந்து வந்தேன்?, நான் எதற்காக இங்கு வந்தேன்?,, 'நான் எங்கே போகிறேன்?' என்ற புதிய புதிரான வினாக்களும் எழுப்பபட்டன.

இந்த வினாக்களும் அவற்றிற்கு அளிக்கப்பட்ட விளக்கங்களும் அதனால் எழுந்த கருத்துருவப் பொய்மைகளும் உண்மையான மனிதனை இந்த உண்மையான உலகத்திலிருந்து அந்நியமாக்கியது. மனிதனுக்கும, மனித உலகத்திற்கும். மனித வாழ்விற்கும் விசித்திரமான வியாக்கியானங்கள் கொடுக்கப்பட்டன.

இதன்படி, இந்தப் பூவுலகம் ஒரு மாயாலோகம். ஒரு மானசீகத் தோற்றப்பாடு. எமக்குள்ளே இருந்துகொண்டு, எல்லாம் தெரிந்ததாக எண்ணிக் கொள்ளும் மனக்குரங்கு, பொய்களைக்கொண்டு உருவகிக்கும் ஒரு போலியான உலகம். சத்தியத்தின் இருப்பிடமாக இன்னொரு உலகம் இருக்கிறது. அந்த ஆன்ம உலகிலிருந்து நாம் இங்கு, வந்து, வந்து, வாழ்ந்து விட்டுப்போகிறோம். விதி என்ற முடிவில்லாப் பெருங்கதையில் நாமெல்லாம் சிறு, சிறு நாடகப்பாத்திரங்கள். வந்து, வந்து. நடித்துவிட்டுப் போகிறோம். எம்மைச் சாவு தீண்டுவதில்லை. உடல்களை உடையாக அணிந்து, பின் உரிந்து விட்டுச் செல்கிறோம். இந்தப்பூமி ஒரு தற்காலிக தங்குமடம். பாவங்களைச் சுமப்பதற்கும், ஆசைகளைத் தீர்ப்பதற்கும், கர்மவினை கழிப்பதற்கும் நாம் இங்குவந்து தங்கிச்செல்கிறோம். பிறப்பு இறப்பு என்ற சூட்சுமச்சக்கரத்தில், முடிவில்லாத ஒரு சங்கிலித் தொடர்பில் பிணைபட்டு, இழுபட்டு, நசிபட்டு எமது வாழ்வு நகர்கிறது. இந்தப் பொய்யான பூவுலக மாயையிலிருந்து விடுபடும்வரை எமக்கு விடிவில்லை. இந்த உலகத்தைத் துறந்து, உறவுகளைத் துறந்து, உணர்வுகளைத் துறந்து, சாதாரண வாழ்வின் சகல வற்றையும் துறந்த பரிபூரண துறவறத்தில் விமோசனத்திற்கு வழி இருக்கிறது. உள்ளே உள்ள உள்ளொளியின் தரிசனத்தில் அந்த மெய்ஞான விழிப்புணர்வில் 'நான்' என்றபொய்ப் பொருள் செத்துவிட மெய் பொருள் புலனாகும். அந்த ஞானோதயத்தில் விதியின் விலங்குகள் உடைந்துவிழும். பிறப்பு, இறப்பு, மறுபிறப்பு என்ற சங்கிலிப் பிணைப்பிலிருந்து விடுதலை கிட்டும்.

'நான் யார் ?, என்ற தேடுதல் 'நான் ஒரு பொய்' என்ற கண்டுபிடிப்புடன் முடிவடைகிறது.

வேதகாலம். மணிபுரி என்ற நாட்டின் மன்னன், துறவறம் பூண்டு அந்தக் குருஷேத்திரம் வருகிறான். மெய்ஞானம் பெற்ற அந்த முனிவனிடம் மண்டியிடுகிறான்.

''நான் மணிபுரி நாட்டின் மன்னன். எனது வயோதிபத்தில் வாழ்க்கையைத் துறந்துவிட்ட நான், மெய்ப் பொருளைக் கண்டுகொள்ள விரும்புகிறேன். நீங்கள் தான் எனக்கு ஞான வொளிகாட்டி, வழி காட்ட வேண்டும்'' எனக் கேட்டான்.

தியானத்திலிருந்துவிழித்துக்கொண்ட முனிவர், மன்னனைப் பார்த்து, ''நான் செத்து விட்டதும் என்னிடம் வா'' என்று சொல்லிவிட்டுக் கண்களை மூடிக்கொண்டார்.

ஒன்றுமே புரியாது, குழப்பமடைந்தவனாக ஆச்சிரமத்திற்கு வெளியேவந்த மன்னன், முனிவரின் சீடனை அழைத்து, முனிவர் கூறிய வார்த்தைகளுக்கு அர்த்தம்கேட்டான்.

''நான் செத்துவிட்டதும் என்று முனிவர் தன்னைக் குறிப்பிடவில்லை. உனக்குள்ளே, உனது ஆசையின் வடிவமாக, உனது அகங்காரத்தின் இருப்பிடமாக இயங்கிக் கொண்டிருக்கும், உனது 'நான்' முதலில் இறக்கவேண்டும். உனது சுயத்தின் சாவுக்குப் பின்னரே தன்னிடம் வருமாறு குருநாதர் கூறியிருக்கிறார்'' என்று அந்தச் சீடன் அரசனுக்கு விளக்கம் கொடுத்தானாம்.

'நான்' என்ற பொய்யை சாகடிப்பதற்கு முன்னரே அந்த அரசன் செத்துப் போனான்.

'நான்' என்பது பொய் என்றால், எனது பிரக்ஞையின் பிரமை என்றால், எனது மனவுலகம் சிருஷ்டிக்கும் மாயை என்றால், 'நான்' என்று எனக்குள்ளிருந்து சிந்திப்பவனாக, உணர்பவனாக, உணர்ச்சிப்படுபவனாக, ஆசைப்படுபவனாக, நானாக என்னை இயக்கிவரும் அந்தப் பிரகிருதி யார் ?

''நான் என்பது ஒரு எண்ணம். எண்ணவோட்டத்தின் நெற்றிக் கண்ணாக அமையப்பெறும் ஒரு எண்ணம்; மனவுலகம் உள்வாங்கிக் கொள்ளும் கோடானு கோடி எண்ணப்படிவங்களின் மையப்படிவமாக 'நான்' என்ற சுயம் எழுகிறது.'' என்கிறார் ஒரு ஞானி.

அப்படியானால், நான் என்பது ஒரு மானசீகப் பொருளா ? நினைவுகளின் நிழலாக, படிமங்களின் நடுவப்படிமமாக, எண்ணச் சிதைவுகளிலிருந்து உயிர் பெறும் ஒரு மானசீகப் பேய்த்தோற்றமாக மனிதனின் சுயத்தை, அவனது ஆளுமையை சித்தரிக்க முடியுமா?

'நான்'என்பது,எனது மனநிலைக்கு அப்பால், எனது உயிர்நிலை சார்ந்த சுயவுணர்வாகவும் இயங்குகிறது அல்லவா? எனது உயிரின் இருப்பிடமாக, பொருளுருவம் பெற்றிருக்கும் உடற்கூறும் எனது சுயத்தின் திண்ணியமான பொருள் வடிவம் அல்லவா ? உடலும் உயிருமாக, இரத்தமும் சதையுமாக, உணர்ச்சியின் பிண்டமாகவும் 'நான்' இருப்புற்று இருக்கிறேன் அல்லவா?

'நான்' என்பது அசுவுலகத்துப் பிசாசு அல்ல. அன்றித் தெய்வலோகத்து பதுமையும் அல்ல.

மனிதன் என்பவன் இயற்கையின் குழந்தை. இயற்கை என்ற மாபெரும் கலைஞனால் படைக்கப்பட்ட ஒரு கலை வடிவம்; உயிர்வடிவம். இயற்கையின் கருவகத்துடன் மனிதனின் தொப்புள் கொடி பின்னிப்பிணைந்து கிடக்கிறது. ஒருபுறம், இயற்கையின் சிருஷ்டியாகவும்,இயற்கையின் மடியில் வேர் பதித்து நிற்பனவாகவும், மறுபுறம் சமூகப்பிறவியாகவும், சமூக வாழ்வியக்கத்தில் உருவாக்கம் பெறுபவனாகவும், இருமுகப் பரிமாணத்தில் மனிதனின் வாழ்வு அமைகிறது.

மனிதன் உணர்ச்சிமயமானவன். உணர்ச்சிகளின் பிண்டமாக இயற்கை மனிதனைப் படைத்திருக்கிறது. இயல்பூக்கங்களாக, இயல்புணர்ச்சிகளாக (INSTINCTS) அவை மனிதனை ஆட்டிப்படைக்கின்றன.

இயற்கை மனிதனைப்படைத்தது மட்டுமன்றி, மனிதன் தன்னைத் தானே படைத்துக் கொள்ளவும்,பாதுகாத்துக் கொள்ளவும், தனது இனத்தை விருத்தி செய்து கொள்ளவும் நிர்ப்பந்திக்கிறது. இந்த நிர்ப்பந்த சக்தியாக, உந்துதலாக, இயல்புணர்ச்சிகள் மனிதனை ஆட்கொள்கின்றன.

இந்த இயல்புணர்ச்சிகளின் மையமாக பாலுணர்ச்சி அமைகிறது. ஒரு ஜீவசக்தியாக, சகல ஜீவராசிகளையும் அது இயங்க வைக்கிறது சகல உயிர்களையும் மீளாக்கம் செய்கிறது. அது என்னையும் உன்னையும் பற்றிக் கொள்கிறது. அதன் ஈர்ப்புச் சக்தியிலிருந்து நீயும் நானும் தப்பிவிட முடியாது.படைத்தலின் தவிர்க்கமுடியாத நியதியாக அது எம்மை பணிய வைக்கிறது. இன்ப நுகர்ச்சியின் பரவசத்தைக்காட்டி அது எம்மை ஆகர்ஷித்துக்கொள்கிறது.

பாலெழுச்சியாக தோற்றப்பாடு கொள்ளும்இந்தஜீவசக்தியை, லிபிடோ (LIBIDO) என்றும், உயிரியக்கசக்தி (LIFE FORCE) என்றும், காதல் தெய்வம் (EROS) என்றும் சிக்மண்ட் பிராய்ட் விபரிக்க விளைகிறார்.

இந்தப்பாலெழுச்சியின் திருவிளையாடல்களை மையக்கருவாகக் கொண்டே பிராய்டின் உளப்பகுப்பியல் மனிதனையும் மனிதவாழ்வையும் விசாரணைசெய்கிறது.

மனிதன் விழிப்புநிலையில் இருக்கும் பொழுது இயங்கிக்கொண்டிருக்கும் சாதாரண பிரக்ஞைக்கு அப்பால், நனவு அற்றநிலையில், ஒரு மனவுலகம் உண்டு. இதுமனிதனின் ஆழ்மனம்; நனவிலிமனம். இதுவே மனித மன இயக்கத்திற்குஆதாரமாக இருக்கிறது; மூலமாக இருக்கிறது. இந்த நனவிலி மனம் என்ற கோட்பாட்டை அடித்தளமாகக்கொண்டே பிராய்டின் உளவியல் தத்துவம் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது.

இந்த நனவிலிமனம் எப்படியானது? எப்படி இயங்குகிறது?மனிதனின் ஆழமனப் பாதாளத்திற்குள், செத்துப் போன நினைவுகளின் கல்லறைகளுக்கு அப்பால், என்ன ஒளிந்து கிடக்கிறது?

மனதின் ஆழத்தில், நனவிலி மனதில் புனிதமான பொக்கிஷம் எதுவும் இருக்கவில்லை. மனிதன் கனவு கண்ட அழியாத ஆன்மாவோ, அன்றி அடுத்த உலகத்து அதிசயப் பொருட்களோ இருக்கவில்லை. பிராய்டின் மனப்புதைபொருள் ஆராய்ச்சி தெய்வலோகத்து புதையல்கள் எதையும் தோண்டி எடுக்கவில்லை. அவரது உளப்பகுப்பியல் கண்டுபிடிப்பில்,அடிமனதின் ஆழத்தில் ஒரு எரிமலை இருந்தது. உணர்ச்சிகளின் நெருப்பலைகளாக அது எரிந்துகொண்டிருந்தது. அடக்கப்பட்டஆசைகளின்அக்கினி நாக்குகள் நர்த்தனமாட அது குமுறிக்கொண்டிருந்தது. பிராய்டின் நனவிலி மனம் கொதிக்கும் உணர்ச்சிகளின் கொப்பறை.

நனவு மனமானது மனிதபண்பாட்டுஉலகத்தால் வனையப்படுகிறது. பண்பாட்டுக் கருத்துலகம்வரித்துவிடும் நியமங்களையும் கட்டுப்பாடுகளையும் உள்வாங்கி உருவாக்கம்பெறுகிறது. தனிமனிதனின் சமூகப் பிரக்ஞையாக செயற்படுகிறது. இந்த நனவுமனமானது அடிமனதிலிருந்து ஆசைகளாக அபிலாசைகளாக, உந்துதல்களாக மேலெழும் இயல்புணர்ச்சிகளை தணிக்கைசெய்து ஒடுக்கிவிடுகிறது. ஒடுக்கப்பட்ட உணர்வுகளும், ஆசைகளும் நனவிலிமனவுலகில் தஞ்சம் பெறுகிறது. அங்கு அவை, தணிந்து அணைந்து போவதில்லை. மாறாக, சீற்றம் கொண்ட பாம்புகளாக அவை சீறி எழுகின்றன. எப்படியாவது, எந்த வழியிலாவது, எந்த வடிவத்திலாவது அடிமனப் புற்றிலிருந்து வெளியேற அவை சதா விளைந்து கொண்டிருக்கின்றன.

கனவுகளும் நனவிலி மனதின் ஒரு வெளிப்பாடு புதிரான படிமங்களில் புனைகதைகள் பின்னி, குறியீட்டுச் சித்திரங்களாக மனத்திரையில் கட்டவிழும் கனவுக்காட்சிகளில் அடிமன ஆசைகள் ஒளிந்து கிடக்கின்றன. நனவுலகில், நிஜவுலகில் நிறைவுகாணமுடி

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## மனிதனைத் தேடும் மனிதன்

யாத ஆசைகள் கனவுலகில் நிறைவு கண்டுவிடுகின்றன. கனவுலகத்தின் கதவுகளைத் திறந்துகொண்டே நனவிலி மனவுலகில் தான் நுழைய முடிந்ததாகப் பிராய்ட் கூறுகிறார்.

உணர்ச்சிகள் ஆசைகளாக அடிமனதிலிருந்து வெளியேற விளைவதும், அவை நனவு மனதில் மறுக்கப்படுவதும், மறுக்கப்பட்ட ஆசைகள் முகமூடிகள் அணிந்து, வேஷங்கள் போட்டு வேறு வழிகளில் வெளிப்பாடு காண விளைவதும், அதனால் எழும் நெருக்குவாரங்களும் முரண்பாடுகளும் உளச் சிக்கல்களாகவும், மனக்கோளாறுகளாகவும் ஆளுமைச் சிதைவுகளாகவும் விபரீத தோற்றப்பாடுகளை எடுப்பதுமாக பாலெழுச்சி என்ற 'காதல் தெய்வத்தின்' திருவிளையாடல்களை பிராய்டிய மனப்பகுப்பியல் விபரித்துக் கூறுகிறது. இந்த உளவியல் தத்துவம் மனித ஆழ்மனதின் அசைவியக்கத்துடன் நின்று விடாது மனிதனின் கலை, பண்பாட்டு உலகத்திற்கும், மனித நாகரிகத்தின் தோற்றத்திற்கும் விசித்திரமான விளக்கங்களையும் கொடுக்க முனைகிறது நனவிலிமனதில்முடங்கிக் கிடக்கும் ஆசைகள் கனவுலகத்தை சிருஷ்டித்து வெளிப்பாடு காண விளைவது போல, நனவு மனமும் விழிப்பு நிலையில், கற்பனா உலகில் பிரவேசிக்கிறது. கற்பனை வடிவில் மனிதன் விழித்துக்கொண்டு காணும் கனவுகள், புராணங்களாக, காவியங்களாக, இலக்கியங்களாக கலைவடிவம் பெறுவதாகவும், மனிதனின் அடக்கப்பட்ட பாலுணர்வு ஆசைகள் இன்பநுகர்ச்சி என்ற அதன் இயல்பான இலக்கிலிருந்து விடுபட்டு, கலா சிருஷ்டிப்பு என்ற உன்னத வெளிப்பாடாக உயர்நிலை மாற்றம்(Sublimation) பெறுவதாகவும் பிராய்டிஸம் மிகவும் அபத்தமான விளக்கங்களையும் கொடுக்கிறது.

எல்லாமே அது, எல்லாவற்றிலும் அது, எல்லாவற்றையும் அசைப்பது அது. அதுவின்றி எதுவுமில்லை என்ற வகையில் பிராய்டின் உளப்பகுப்பியல் பாலுணர்ச்சிக்கு அலாதியான முக்கியத்துவம் கொடுத்து அதன் மையத்திலிருந்தே மனித மனம், மனித வாழ்வு, மனித பண்பாடு என சகலவற்றிற்கும் விளக்கமும் அளிக்கிறது. இந்த உளவியல் தத்துவம் மனிதனை ஆசையின் பிராணியாக, இன்பத்தின் பித்தனாக சித்தரிக்க முனைகிறது.

மனிதன் இயற்கையின் படைப்பு என்பதால், மனித உயிர்வாழ்வு இயற்கையின் நிர்ப்பந்த சக்திகளுக்கு உட்பட்டிருப்பதால், இயல்புணர்ச்சியாக எழும் பாலெழுச்சியின் அழுத்தத்தையும், வீச்சையும், மனித மனதிலும், மனித உறவுகளிலும் அது செலுத்தும் தாக்கத்தையும் நாம் குறைவாக மதிப்பிட முடியாது. ஆயினும் பாலுணர்ச்சி உந்துதலை மனிதனின் சாரமாக கற்பித்து, மனித வாழ்விற்கும், மனித பண்பாட்டு வரலாற்றிற்கும் ஒருமுகப் பரிமாணத்தில் விளக்கம் அளித்துவிட முடியாது

பிராய்ட் உணர்ச்சிமயமான மனிதனைக் கண்டார், மனிதன் இயற்கையோடு ஒன்றியிருப்பதை பார்த்தார். மனிதனின் பரிணாம வேர் இயற்கையில் புதைந்து கிடப்பதை அவதானித்தார். ஆயினும் அந்தக் கண்டுபிடிப்பை நம்பமுடியாத கற்பனாவாத எல்லைகள் வரை விரிவுபடுத்தி, மிகைப்படுத்தி விட்டார். பிராய்டின் தேடுதல் மனிதனின் முழுமையான முகத்தைக் காட்டவில்லை மனிதனை ஒரு சமூக பிறவியாக, சமூக உறவுகளால் பிணைக்கப்பட்டு, சமூக வாழ்வியக்கத்தால் உருவாக்கப்படுபவனாக அவர் பார்க்கவில்லை. (இன்னும் வரும்)

[நன்றி - வெளிச்சம்]

## ஒடுக்கப்பட்டோர்

இந்தநிலையில் தான், 1955 ஆம் ஆண்டளவில் ஒடுக்கப்பட்ட இளைஞர்களால் தம்மினத்திற்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளை சொல்கின்ற, அவமானங்களைச் சொல்கின்ற, வறுமை நிலையைச் சொல்கின்ற, இலக்கியங்கள் படைக்கப்பட்டன

இந்த எழுத்துக்கள் மேல்தட்டு வர்க்கத்தினரிடையே ஜீரணமாகவில்லை. அவர்கள் இந்த வகையான எழுத்துகளைமிகவும் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கினர்.

முதலில் கவிதை வடிவத்தின் மூலமே இது வெளிப்பட்டாலும் நாளடைவில் சிறுகதைகள், நாவல்களிலும் இதுஇடம் பிடித்துக் கொண்டது.

மாராட்டிய மொழியில் தலித் என்றால் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் என கருதப்படுகின்றபோதிலும் ''நாம ஜாதியற்றவர்கள்' என்று கூறிக்கொள்ளவே 'தலித்' என்று கூறிக்கொள்கிறோம் என்கிறார் ஒரு பிரபல தலித் எழுத்தாளர்

தலித்துக்கள் மட்டும் இந்த வகையான இலக்கியப் படைப்பில் ஈடுபடவேண்டும் என்றில்லை. மகர ஷ்டிரா மாநிலத்தில் சில மேல்தட்டு பிரமாண எழுத்தாளர்கள் கூட தலித் இலக்கியப் படைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கொடுமைக்கு உள்ளாக்கப்படும் இனத்தைப்பற்றி விபரிக்கப்படும் எல்லாப் படைப்புக்களும் 'தலித்' இலக்கியம் என்று சொல்லலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தலித் இலக்கிய இயக்கம் இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும்எல்லா மொழிகளிலும் பரவியுள்ளது. தமிழ் நாட்டிலும் இது வலுப்பெற்று வருகின்றது.

மாராட்டிய இலக்கியத்தின் ஒரு பகுதியாக இருந்த தலித் இலக்கியம் இன்று அனைத்து தேசங்களிலும் உள்ள பிற்படுத்தப்பட்டோரின் இலக்கியமாக வளர்ச்சியடைந்துள்ளது

மார்க்சிய, அல்லது இடதுசாரி இலக்கியம் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அடிப்படையாகக் கொண்டது. தலித் இலக்கியம் கலாசார ஏற்றத்தாழ்வுகளை அடிப்படையாகக் கொண்டது என ஒரு தலித் படைப்பாளி தெரிவிக்கிறார்.

இந்தியாவிலேயே மற்றைய மாநிலங்களை விட, மகாராட்டிரததில் சாதி அடிப்படையிலான ஒடுக்குதல் அதிகம்என்று சொல்லப்படுகிறது இங்கு பிற்படுத்தப்பட்டோர் என்று சொல்லப்படும் மக்கள் மிருகங்களை விட கேவலமாக நடாத்தப்பட்டுள்ளனர். ஆதலினால் தலித் இலக்கிய இயக்கத்திற்கான மூலம் இங்கு உருவானதில் எதுவித வியப்பும் இல்லை.

மாராத்திய மொழியில் முளைவிட்ட இந்த பிற்படுத்தப்பட்டோர் இலக்கிய இயக்கம் வேறு இடங்களிலும், மொழிகளிலும் பரவி வளர்ச்சி கண்டு வருகின்றது.

1972 ஆம் ஆண்டிற்கும் 1975 ஆம் ஆண்டிற்கும் இடையில் உள்ள கால கட்டத்தை பிற்படுத்தப்பட்டோர் இலக்கியத்தின் இரண்டாம் கால கட்டம் எனக் கருதலாம்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இந்த வகையான இலக்கியங்கள் மொழிபெயர்ப்பின் மூலமே வந்தடைகிறது. ஒரு சில சமூகபிரக்ஞை உள்ள எழுத்தாளர்களைத் தவிரமற்றையோர் வாழ்க்கையுடன் சம்பந்தப்படாத இலக்கியங்களே படைத்து வருகின்றனர்.

இந்த வகையில்,

ஈழம் பெருமைப்படலாம். எமது மண்ணில் ஒடுக்கப்படுவோரின் கொடுமைகளை, அவலங்களை, பசியை வெளிப்படுத்தும் ஏராளமான 'தலித்' இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன.

அஃதாவது, 'தலித்' என்று மகுடம் சூட்டப்படாமலேயே இந்த வகையான ஒடுக்கப்பட்டோர் இலக்கியம் ஆக்கப்பட்டுள்ளது.

மறைந்த எழுத்தாளர் கே. டானியல் அவர்கள் தான் தமிழில் தலித் இலக்கியத்தின் பிதாமகன் என்று இந்திய அறிஞர்களாலேயே சொல்லப்படுகின்றது.

ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் குரலாக இவரது பலபடைப்புகள் வெளிவந்துள்ளன. 'அடிமைகள்' நாவல் இதற்கு உதாரணம்.

இவரைத் தவிர, சுபத்திரன், முருகையன், டொமினிக்ஜீவா, சைலாசபதிஆகியோர் உட்பட பல எழுத்தாளர்கள் சமுதாய மாற்றத்தின்தேவையைஉணர்ந்து 'தலித்' இலக்கியப் படைப்பில் ஈடுபட்டனர்.

இங்கு எல்லா பிரிவைச் சேர்ந்த எழுத்தாளர்களினாலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான இலக்கியம் படைக்கப்பட்டுள்ளது தமிழ் மொழியில் ஈழத்தில்தான் அதிகமான ,தலித்' படைப்புகள்வெளிவந்துள்ளன

சிறுகதைகள், நாவல்களில் ஒடுக்கப்படடோருக்கான இலக்கியம் படைக்கப்பட்ட அளவிற்கு கவிதையில் அதன் பாதிப்பு பெரிதாக இடம் பெறவில்லை என்று சொல்லலாம்.

தலித்இலக்கியத்தின் தாய்த் தேசம் என்று சொல்லப்படுகின்ற மகாராஷ்டிரத்தில் இதன் வளர்ச்சி குன்றிப் போய் இருப்பதாக ஒரு கசப்பான செய்தி கிடைத்துள்ளது. ஆனால், அங்கு பிற்படுத்தப்பட்டோர் ஒடுக்கப்படுவது குறைந்திருப்பதாக நாம் எண்ணிவிடக் கூடாது.

இந்த இலக்கிய இயக்கத்தில் ஆர்வம் கொண்டிருந்த பல இளைய எழுத்தாளர்கள்தாம் மேற்தட்டு மக்களின் தரத்திற்கேற்ப பொருளாதார வளம் பெற்றிருப்பதாக கருதுகின்றனர். அதனால் தம்மை சிறுமைப்படுத்த முடியாது என்கிற மாயையில் மூழ்கியுள்ளனர்

இது தான் இவ் விலக்கிய வளர்ச்சி அங்கு தேக்கமடைந்திருப்பதற்கான காரணம் எனச் சொல்லப்படுகின்றது.

எவ்வாறிருப்பினும் 'தலித்' இலக்கியத்தின் தாய்த்தேசம் பெருமைப்படலாம்; தலைநிமிர்த்திக் கொள்ளலாம்

மனிதர்கள் எவரும் ஒடுக்கப்படுவதற்கு உரியவர்கள் அல்ல என்ற சேதியை உலகத்தின் செவிகளுக்குச் சொல்ல வேண்டிய பொறுப்பு எல்லா இலக்கிய புருஷர்களுக்கும்வரவேண்டும் என்பதை மனிதாபிமானமுள்ளஎவரும்மறுக்கமுடியாது.

# மீட்புநிதிக் கடன் மீளளிப்பு 1993

### நல்லூர்
### யா/ந

#### தை

| | | | |
|---|---|---|---|
| 01. | 111 | 06. | 3287 |
| 02. | 280 | 07. | 5126 |
| 03. | 1176 | 08. | 5186 |
| 04. | 1831 | 09. | 5312 |
| 05. | 2606 | 10. | 5326 |

#### மாசி

| | | | |
|---|---|---|---|
| 01. | 42 | 06. | 961 |
| 02. | 163 | 07. | 1830 |
| 03. | 435 | 08. | 3125 |
| 04. | 442 | 09. | 4365 |
| 05. | 670 | 10 | 5527 |

#### பங்குனி

| | | | |
|---|---|---|---|
| 01. | 841 | 06. | 3214 |
| 02. | 905 | 07. | 4101 |
| 03. | 1137 | 08. | 5255 |
| 04. | 2137 | 09. | 5523 |
| 05. | 3175 | 10. | 5647 |

#### சித்திரை

| | | | |
|---|---|---|---|
| 01. | 173 | 06. | 2684 |
| 02. | 915 | 07. | 2765 |
| 03. | 987 | 08. | 4896 |
| 04. | 1690 | 09. | 4915 |
| 05. | 2469 | 10. | 5264 |

#### வைகாசி

| | | | |
|---|---|---|---|
| 01. | 260 | 06. | 597 |
| 02. | 269 | 07. | 1514 |
| 03. | 279 | 08. | 1841 |
| 04. | 531 | 09. | 4115 |
| 05. | 593 | 10. | 4364 |

#### ஆனி

| | | | |
|---|---|---|---|
| 01. | 149 | 06. | 1508 |
| 02. | 311 | 07. | 1774 |
| 03. | 371 | 08. | 3153 |
| 04. | 857 | 09. | 3573 |
| 05. | 972 | 10. | 5094 |

#### ஆடி

| | | | |
|---|---|---|---|
| 01. | 469 | 06. | 1124 |
| 02. | 614 | 07. | 1133 |
| 03. | 762 | 08. | 1554 |
| 04. | 804 | 09, | 3862 |
| 05. | 1107 | 10, | 4621 |

#### ஆவணி

| | | | |
|---|---|---|---|
| 01. | 1348 | 06, | 3871 |
| 02. | 2127 | 07. | 4253 |
| 03. | 2346 | 08. | 5271 |
| 04. | 3571 | 09. | 5428 |
| 05. | 3608 | 10. | 5659 |

#### புரட்டாதி

| | | | |
|---|---|---|---|
| 01. | 120 | 06. | 1298 |
| 02. | 423 | 07. | 2656 |
| 03. | 751 | 08. | 3480 |
| 04. | 1227 | 09. | 3490 |
| 05. | 1283 | 10. | 5103 |

#### ஐப்பசி

| | | | |
|---|---|---|---|
| 01. | 58 | 06. | 2101 |
| 02. | 235 | 07. | 3845 |
| 03. | 543 | 08. | 3892 |
| 04. | 1800 | 09. | 5322 |
| 05. | 1832 | 10. | 5388 |

#### கார்த்திகை

| | | | |
|---|---|---|---|
| 01. | 27 | 06. | 1632 |
| 02. | 256 | 07. | 2594 |
| 03. | 263 | 08. | 3119 |
| 04. | 273 | 09. | 3324 |
| 05. | 1231 | 10. | 4682 |

### யாழ்ப்பாணம்
### யா/யா

#### தை

| | | | |
|---|---|---|---|
| 01. | 230 | 06. | 2064 |
| 02. | 583 | 07. | 2345 |
| 03. | 615 | 08. | 3208 |
| 04. | 1423 | 09. | 3283 |
| 05. | 1440 | 10 | 3451 |

#### மாசி

| | | | |
|---|---|---|---|
| 01. | 232 | 06. | 2343 |
| 02. | 364 | 07 | 3537 |
| 03. | 449 | 08. | 4491 |
| 04. | 1410 | 09. | 4550 |
| 05. | 1952 | 10. | 5013 |

#### பங்குனி

| | | | |
|---|---|---|---|
| 01. | 36 | 06. | 861 |
| 02. | 69 | 07. | 1609 |
| 03. | 496 | 08. | 2934 |
| 04. | 503 | 09. | 869 |
| 05. | 728 | | |

#### சித்திரை

| | | | |
|---|---|---|---|
| 01. | 31 | 06. | 930 |
| 02. | 434 | 07. | 3298 |
| 03. | 441 | 08. | 3463 |
| 04. | 471 | 09. | 3978 |
| 05. | 911 | | |

#### வைகாசி

| | | | |
|---|---|---|---|
| 01. | 42 | 06. | 847 |
| 02. | 265 | 07. | 983 |
| 03. | 361 | 08. | 1225 |
| 04. | 511 | 09. | 4359 |
| 05. | 642 | | |

#### ஆனி

| | | | |
|---|---|---|---|
| 01. | 227 | 06. | 2372 |
| 02. | 443 | 07. | 4130 |
| 03. | 1742 | 08. | 4289 |
| 04. | 1866 | 09. | 4528 |
| 05. | 2040 | | |

#### ஆடி

| | | | |
|---|---|---|---|
| 01. | 637 | 06. | 3260 |
| 02. | 1072 | 07. | 3535 |
| 03. | 1276 | 08. | 3892 |
| 04. | 2020 | 09. | 4403 |
| 05. | 2392 | | |

#### ஆவணி

| | | | |
|---|---|---|---|
| 01. | 112 | 06. | 2425 |
| 02. | 789 | 07. | 2758 |
| 03. | 883 | 08. | 3754 |
| 04. | 1493 | 09. | 3877 |
| 05. | 1724 | | |

#### புரட்டாதி

| | | | |
|---|---|---|---|
| 01- | 509 | 06- | 4321 |
| 02. | 2039 | 07. | 4380 |
| 03. | 2512 | 08. | 4639 |
| 04. | 2833 | 09. | 4944 |
| 05. | 3720 | | |

#### ஐப்பசி

| | | | |
|---|---|---|---|
| 01. | 11 | 06. | 4200 |
| 02. | 14 | 07. | 4231 |
| 03. | 275 | 08. | 4471 |
| 04. | 374 | 09. | 4852 |
| 05. | 3647 | | |

#### கார்த்திகை

| | | | |
|---|---|---|---|
| 01. | 168 | 06. | 629 |
| 02. | 205 | 07. | 1436 |
| 03. | 520 | 08. | 2630 |
| 04. | 526 | 09. | 5033 |
| 05. | 533 | | |

### கோப்பாய்

#### தை
### யா/கோ

| | | | |
|---|---|---|---|
| 01. | 38 | 05. | 854 |
| 02. | 529 | 06. | 1283 |
| 03. | 531 | 07. | 4253 |
| 04. | 810 | 08. | 4915 |

#### மாசி

| | | | |
|---|---|---|---|
| 01. | 108 | 05. | 2712 |
| 02. | 453 | 06. | 3021 |
| 03. | 1721 | 07. | 4877 |
| 04. | 2624 | 08. | 5303 |

#### பங்குனி

| | | | |
|---|---|---|---|
| 01. | 57 | 05. | 1561 |
| 02. | 326 | 06. | 2207 |
| 03. | 920 | 07. | 2954 |
| 04. | 1179 | 08. | 4759 |

#### சித்திரை

| | | | |
|---|---|---|---|
| 01. | 33 | 05. | 1426 |
| 02. | 252 | 06. | 1451 |
| 03. | 314 | 07. | 4900 |
| 04. | 422 | 08. | 5160 |

#### வைகாசி

| | | | |
|---|---|---|---|
| 01. | 117 | 05. | 3473 |
| 02. | 388 | 06. | 3919 |
| 03. | 951 | 07. | 5217 |
| 04. | 1800 | 08. | 5263 |

#### ஆனி

| | | | |
|---|---|---|---|
| 01. | 354 | 05. | 3388 |
| 02. | 363 | 06. | 4539 |
| 03. | 1846 | 07. | 5338 |
| 04. | 2529 | 08. | 6230 |

#### ஆடி

| | | | |
|---|---|---|---|
| 01. | 303 | 05. | 2540 |
| 02. | 385 | 06. | 3184 |
| 03. | 1568 | 07. | 3638 |
| 04. | 1783 | 08. | 4172 |

#### ஆவணி

| | | | |
|---|---|---|---|
| 01. | 243 | 05. | 1972 |
| 02. | 345 | 06. | 4880 |
| 03. | 743 | 07. | 6216 |
| 04. | 964 | 08. | 6261 |

#### புரட்டாதி

| | | | |
|---|---|---|---|
| 01. | 25 | 06. | 3206 |
| 02. | 66 | 07. | 3241 |
| 03. | 836 | 08. | 3611 |
| 04. | 1960 | 09. | 4510 |
| 05. | 2964 | | |

#### ஐப்பசி

| | | | |
|---|---|---|---|
| 01. | 212 | 06. | 3622 |
| 02, | 446 | 07. | 6341 |
| 03. | 451 | 08. | 6428 |
| 04. | 1055 | | |
| 05. | 2385 | | |

#### கார்த்திகை

| | | | |
|---|---|---|---|
| 01. | 139 | 05. | 4471 |
| 02, | 213 | 06, | 5657 |
| 03. | 506 | 07. | 6153 |
| 04. | 3173 | 08. | 6376 |

(தொடரும்)

# பூநகரி கூட்டுப்படைத்தளம் தகர்ப்பு; தமிழீழப் போரில் புதிய பரிணாமம்!

சிறிலங்கா இராணுவ வரலாற்றில் மிக மோசமான பின்னடைவை ஏற்படுத்தியதாக வர்ணிக்கப்படும் பூநகரி- நாகதேவன்துறை கூட்டுப் படைத்தளம் மீதான விடுதலைப்புலிகளின் தாக்குதலானது தமிழீழவிடுதலைப் போராட்டத்தைப் பொறுத்து ஒரு மைல்கல் என்றே கூறலாம். இதேவேளைபத்தாண்டு தமிழீழ விடுதலைப் போரில் ஓர் உக்கிரமானதும், கடுமையானதுமான தாக்குதல் என்றும் குறிப்பிடலாம்.

1983ஆம் ஆண்டு திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு இணையான தாக்கத்தை இத்தாக்குதலானது அரசியலில் ஏற்படுத்தியுள்ள அதேவேளை இராணுவவரலாற்றில் இதன் தாக்கம் அதைவிடப் பெரியதென்று கூறுவதில் தவறு ஏதும் இல்லை. அதாவது பத்துவருட ஆயுதப்போராட்டத்தில் விடுதலைப்புலிகளின் வளர்ச்சியானது சிறிலங்கா இராணுவத்திற்கு வரலாற்றில் மிக மோசமான பின்னடைவொன்றை பூநகரியில் ஏற்படுத்தியுள்ளது

பூநகரி- நாகதேவன்துறை தளத்தின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பெரும் எடுப்பிலான தாக்குதல், இத் தாக்குதலின் போது இருதரப்பினருக்கும் ஏற்பட்ட உயிரிழப்பு, விடுதலைப்புலிகள்கைப்பற்றிய இராணுவத்தளபாடங்கள் என்ற வகையில் இத்தாக்குதலானது தமிழீழ விடுதலைப் போரில் பெரும் வரலாற்று சமர்களில் ஒன்று என இடம்பெறக் கூடியதே ஆகும்.

இத்தாக்குதலின் போது சுமார்800—1000க்கும் இடைப்பட்ட சிறிலங்கா ஆயுதப் படையினர் கொல்லப்பட்டதாக கணிப்பீடு செய்யப்படுகின்றது- குறைந்தது 500 படையினர் காயமடைந்ததாகவும் தெரியவருகின்றது. அதாவது நான்கு இலக்கங்களை எட்டியுள்ள ஆயுதப் படையினர் இழப்பானது, ஓர் உள்நாட்டுப்போரில் அதிலும், இலங்கை போன்ற சிறியதீவில் இடம்பெறும் போரில் ஒரு சாதாரண அளவல்ல.

இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பெரும் உயிரிழப்போடு, இரண்டு இராணுவ பட்டாலியன்களைச் சிதைத்தது மட்டுமல்ல பெருமளவு ஆயுதத்தளபாடங்களையும் விடுதலைப் புலிகளுக்குக் கொடுத்துள்ளது. இது சுமார் 25 கோடி ரூபாவிற்கு மேற்பட்டதாகக் கருதப்படுகின்ற இவ் இராணுவ தளபாடங்கள் சிறிலங்கா இராணுவத்தின் ஒரு பட்டாலியனுக்குத் தேவையான சகல விதமான இராணுவ ஆயுத தளபாடங்களையும் கொண்டது என அறிய முடிகின்றது. இதில் பலரக கனரக ஆயுதங்களும் அடங்கியுள்ளன-

இதைத்தவிர இத்தாக்குதலின் பின் விடுதலைப்புலிகள் பூநகரி படைத்தளத்தைவிட்டு வெளியேறியமையானது அவர்களின் போர் யுக்தியே எனக் கருதவே இடமுண்டு. கடந்த காலத்திலும் அவர்கள் அவ்வாறே செய்துள்ளனர். பி. பி. ஸியின் முன்னாள் கொழும்பு செய்தியாளர் கிறிஸ்மோறிஸ் 'விடுதலைப்புலிகள் எதைத் திட்டமிட்டனரோ அதை அடைந்துவிட்டார்கள். கடற்படை ராடர் நிலையம் அழிக்கப்பட்டுவிட்டது. பல மாதங்களுக்குத் தேவையான ஆயுதங்களையும் அவர்கள்பெற்றுள்ளனர். எனவே அங்கிருக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இல்லை' எனக் குறிப்பிட்டமை மிகவும் சரியான கணிப்பீடு என்றே கூறமுடியும்.

பூநகரி - நாகதேவன்துறை படைத்தளமானது- யாழ். குடாநாட்டின் முற்றுகைக்கென கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது. அதாவது, யாழ். குடாநாட்டின் நுழைவாயிலில் சுமார் 25 கி மீற்றர்சுற்றளவு விஸ்தீரணத்தைக் கொண்டதாகவும், சிறிலங்கா இராணுவத்தின் இரு பட்டாலியங்களையும் கொண்டிருந்தது. அத்தோடு, கடல்வழி விநியோகப் பாதையும்கொண்டிருந்தது.

இந் நிலையில், இம் முகாம் புலிகளின் தாக்குதலினால் அழிக்கப்பட்டமையானது விடுதலைப் புலிகளுடன் சிறிலங்கா இராணுவம் கடைப்பிடித்துவரும் யுத்த தந்திரோபாயங்களின் நம்பிக்கைத் தன்மை பற்றிய கேள்வியை எழுப்பியுள்ளது. மேலும் ஒரு இரவுத் தாக்குதலில் இரு பட்டாலியங்களைப் பலத்த சேதத்திற்கு உள்ளாக்கக்கூடியபலத்தை விடுதலைப் புலிகள் பெற்றுள்ளமையானது இராணுவத் தரப்பில் அதிர்ச்சியூட்டும் அம்சமாகவே இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆனால், விடுதலைப் புலிகளைப் பொறுத்து இத்தாக்குதலானது இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்தும் போர் யுக்தியில் வளர்ச்சியைக் காட்டும் அம்சமாக அமைந்ததெனலாம்.

**ஜெயராஜ்**

சில மாதங்களுக்கு முன் (யூலையில்) மணலாற்றுப் பிரதேசத்தில் அவர்கள் மேற்கொண்ட இதயபூமி I நடவடிக்கை மூலம் அவர்கள் மண்கிண்டிமலை ராணுவமுகாமை நிர்மூலம் ஆக்கியபோர் யுக்தியின் விரிவாக்கமே பூநகரி - நாகதேவன்துறை படைத்தளத்தின் மீதான தாக்குதலின் வடிவமாகும். இது தலைவர் பிரபாகரன் 1992ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வகுத்த புதிய போர் யுக்தியின் பரிணாமவளர்ச்சியே ஆகும்.

கடந்த காலத்தில் மாங்குளம், கொக்காவில் போன்ற முகாம்கள் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டபோது வடபகுதியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் நிலத்தால் சூழப்பட்ட தனித்துவமான முகாம்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பது உணர்த்தப்பட்டிருந்தது. ஆனையிறவுச் சமரிலும் வெளிக்காட்டப்பட்டது. ஆயினும் பின்னர் கடல்வழித்தொடர்பு ஏற்படுத்தப்பட்டது, ஆனால் தற்போதைய பூநகரி- நாகதேவன்துறைபடைத்தளத்தை விடுதலைப் புலிகள் அழித்ததானது கடல்வழித் தொடர்பு இருப்பினும் வடக்கில் இராணுவ முகாம்களை எவ்வாறு பாதுகாத்தல் என்பது குறித்த புதிய கேள்வி ஒன்றை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் தோற்றுவித்துள்ளது.

இக்கேள்வி தனியாக, விடுதலைப் புலிகளால் ஒரு அதிரடித்தாக்குதல் ஒன்றினால் ஒரு முகாமை நிர்மூலம் ஆக்க முடியும் என்பதினாலும், பெருமளவு இராணுவத்தினரைக் கொன்றொழிக்க முடியும் என்பதினால் மட்டுமல்ல, தற்பொழுது கைமாறியுள்ள கனரக ஆயுதங்களினாலும் எழுந்தது என்றே கூறலாம். புலிகளின் பாவனையில் உள்ள ஆயுதங்களை விட சில கனரக ஆயுதங்களை பூநகரி- நாகதேவன்துறை தாக்குதலினால் புலிகள் பெற்றுக்கொண்டுள்ளனர் என்பதோடு, தமது பாவனையில் உள்ள கனரகஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கணிசமான தொகையில் பெற்றுக்கொண்டும் உள்ளனர். இது வடக்கிலுள்ள முகாம்களின் பாதுகாப்பிற்கு பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும் என எதிர்பார்ப்பதில் தவறு ஏதும் இருப்பதாக இல்லை.


மேலும், இத் தாக்குதலில் கடற்புலிகளின் பங்கு கணிசமானதாகும்- பூநகரி—நாகதேவன்துறை தளம் மீதான முதற் பலமான அடி கடற்புலிகளாலேயே கொடுக்கப்பட்டது- இத் தாக்குதல் கடற்கரும்புலித் தாக்குதலாக அமைந்தது- இத் தாக்குதலானது இப்படைத்தளத்தின் வீழ்ச்சிக்கு பெரிதும் உதவியது.

இதேவேளை இத்தாக்குதல் நடவடிக்கையில் கடற்புலிகள் தனியாக கடற்படை என்ற ரீதியில் அமையாது அமெரிக்காவின்புகழ்பெற்ற 'மரையன் யோஸ்'* போன்று கடலிலிருந்து தரையிறங்கும் தாக்குதல் படையணியாகவும் (Marine Force) செயற்பட்டனர். அதாவது கடற்புலிகளின் செயற்பாடு கடலிலும் தரையிலுமாக இருந்தது- சிறிலங்கா கடற்படையினருக்கு எதிராகச் கடலில்செயற்பட்ட கடற்புலிகள் கரையோரப்பகுதியில் தரையிறங்கியும் போரிட்டனர்.

மூன்றுநாள் யுத்தத்தின்பின் விடுதலைப் புலிகள் பூநகரி - நாகதேவன்துறை படைத்தளத்தில் இருந்து வெளியேறியிருப்பினும், இத்தாக்குதலின் மூலம் யாழ் கடல்நீரேரி கடற்புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது என்றே கூறலாம். இது நாகதேவன்துறையை கடற்படையினர் இழந்ததினால் மட்டுமல்ல இத்தாக்குதலில்கடற்புலிகள் காட்டிய போரிடும் ஆற்றலும், இவ்யுத்தத்தின் மூலம் கடற்படையினரிடம் இருந்து பெற்றுக் கொண்ட கடற்படைத் தளபாடங்களும் இதற்கு உதவுபவையாகவுள்ளன.

அதாவது, இத்தாக்குதலின் மூலம் ஆழம் குறைந்த கடற்பரப்பில் - குறிப்பாகக் கரையோரப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினரின் நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் கட்டுப்படுத்தும் நிலையை அடைந்துள்ளமை வெளிப்படை. இதன்மூலம், கொழும்பில் கடந்த வருட இறுதியில் கொல்லப்பட்ட அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோ கரையோரங்களில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவென வகுத்துக் கொடுத்த போர் யுக்தி புலிகளால் உடைத்தெறியப்பட்டுள்ளது எனக் கூறமுடியும் அதாவது, நீருந்து விசைப்படகுகளால் ஆழம் குறைந்த கரையோரங்களையும் கட்டுப்படுத்துதல் என்பது முடிவிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இது முகாம்களின் பாதுகாப்பு என்ற ரீதியில் சிறிலங்கா ஆயுதப் படையினருக்கு சவாலாக எழுந்துள்ள விடயம் ஆகும். அதாவது, அவசரமான வேளையில், முகாமில் உள்ளோருக்கு உதவியாகத் தரையிறக்குதல் தொடர்பான விடயம் பெரும் கேள்விக்குரியதாக மாறிவிட்டது.




இந் நிலையில் இராணுவத்தை தரையிறக்க கடற்படையினர் தீவிர அக்கறை காட்டியபோதிலும்விடுதலைப் புலிகள் பூநகரிப்பகுதியில் இருந்து வெளியேறும்வரை அது சாத்தியமாகவில்லை.

இத் தரையிறக்க முயற்சியை முறியடித்ததில் கடற் புலிகளின் பங்கு கணிசமானதாகும். அதாவது மோதல் இடம் பெற்ற மூன்று தினங்களும் பூநகரிப் பிரதேசத்தைப் புலிகள் காலாட்படைப் பிரிவுகள் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததுபோன்று யாழ். கடல் நீரேரியையும், கல்முனையில் இருந்து பள்ளிக்குடா வரையிலுமான மேற்கு கரையோரத்தையும் கடற்புலிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர். இதுவே சிறிலங்கா படையினரின் தரையிறங்கல் முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்ததிற்குக் காரணமாக அமைந்தது.

அதாவது ஆனையிறவுப் பெரும் சமர் இடம்பெற்று சுமார் ஒன்றரைவருட காலத்திற்குள் விடுதலைப்புலிகளின் முகாம்கள் மீதான தாக்குதல் யுக்தி புதியதொரு பரிணாமத்தைபெற்றுவிட்டதைபூநகரி- நாகதேவன்துறை மீதான தாக்குதல் வெளிப்படுத்தியுள்ளது இது விடுதலைப் புலிகளின் பலத்தை அதிகரிந்துள்ளதோடு வடபகுதியில் உள்ள இராணுவ முகாம்களின் பாதுகாப்பு குறித்து சிறிலங்கா இராணுவத்தினருக்கு அச்சுறுத்தலாகவும் மாறியுள்ளது.

ஆனையிறவு பெரும்சமர் நடந்தவேளை சிறிலங்கா கடற்படை ஆற்றிய பங்கு தற்பொழுது கடற் புலிகளின் பிரவேசத்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதிலும் ஆழம் குறைந்த கடற் பரப்பில் சிறிலங்கா கடற் படை தனது கட்டுப்பாட்டை இழந்துள்ள நிலையில் ஆபத்திற்கு உதவும் ஒரு தரையிறக்கம் இனிக் கேள்விக்குரியதாகவே இருக்கும். இதன் காரணமாக ஆழம் குறைந்த கடற் பரப்பை விநியோக வழியாகக் கொள்வதும் ஒரு முகாமின் பாதுகாப்பு குறித்து இராணுவத் தரப்பு பெரியளவில் சிந்திக்க வேண்டிவரும்.

சிறிலங்கா ஆயுதப்படையினர் குறிப்பாக விமானப்படை தற்பொழுது ரஷ்யத் தயாரிப்பான எம்-17 ஏ ரக ஹெலிகப்டர்களைக் கொண்டிருப்பினும் பூநகரி தாக்குதலின் போது துருப்பினரைத் தரையிறக்கும் முயற்சிகள் எதையும் வெற்றிகரமாக மேற்கொள்ள முடியவில்லை. இதனால்வரும் ஆபத்தை ஏற்கனவேவிமானப் படையினர் உணர்ந்திருந்தமையினாலேயே இம்முயற்சியில் பெரிதும் அக்கறைகாட்டவில்லைபோல் உள்ளது.

இந் நிலையானது எந்தவொரு முகாமும் தனித்து விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க கூடியதாக உருவாக்கப்பட்டால் அன்றி வடக்கில் அதன் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவது கடினமாகவே இருக்கும் என்ற நிலையை உருவாக்கியுள்ளது.

ஆனால் அவ்வாறு அமையும் தளங்கள் இரண்டு பட்டாலியங்களுக்கு மேல் இருக்கும் பட்சத்திலேயே புலிகளின் அதிரடித் தாக்குதல்களில் இருந்து தப்பிக்க முடியும். அதாவது இரண்டிற்கு மேற்பட்ட பட்டாலியங்கள் எந்த முகாமிலும் நிறுத்தப்படவேண்டிய நிர்ப்பந்தத்தை விடுதலைப் புலிகள் பூநகரி தாக்குதல் மூலம் இராணுவத்திற்கு உருவாக்கியுள்ளனர்.

ஆனால், இதனை பகலில் தூங்கி இரவில் விழித்திருக்குமாறு இராணுவத்திற்கு ஆலோசனை கூறும் சிறிலங்காவின் ஜனாதிபதியும், முப்படைகளின் தளபதியும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜேதுங்க போன்றோரால் புரிந்து கொள்ள முடியுமா என்பதே இன்றுள்ள கேள்வி.

# காவல் நிலையம் மீது வன்முறைக் கும்பல் தாக்கு!

ஒரு பொலிசார் பலி

தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்தில் குன்னச் சாவடிக்காவல் நிலையத்தை வன்முறைக் கும்பல் ஒன்று நேற்று அதிகாலை தாக்கியுள்ளது. இத் தாக்குதலில் ஒரு காவலர் கொல்லப்பட்டார் மூன்று காவலர் காயமடைந்தனர்.

சுமார் 20பேர் அடங்கிய அந்த கோஷ்டி நாட்டு வெடி குண்டுகளைக் கொண்டு அக் காவல் நிலையத்தைத் தாக்கினர் எனவும் வடலூர் காவல் நிலையத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் விசாரணைக் கைதி ஒருவர் இறந்து போனதிற்கு பழிவாங்கும் முகமாக இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கபபடுகின்றது

காயமடைந்தவர்களில் ஒருவரின் நிலை மிகவும் மோசமாகவுள்ள தாகவும் மாநில காவலதுறை அதிகாரி உட்பட உயர் காவல்துறை அதிகாரிகளும் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்துள்ளனர் எனவும் அறிவிக்கப்படுகிறது.

## வங்கியாளர் பரீட்சை

இலங்கை வங்கியாளர் பரீட்சை எதிர்வரும் 20ஆம், 21ஆம், 27ஆம் திகதிகளில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்கான பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன அத்துடன் இதற்கான வினாத்தாள்களும் இங்கு எடுத்துவரப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## சமுகந்தர கோரிக்கை

வடபிராந்திய போக்குவரத்துச்சபை அனைத்து டிப்போ ஊழியர்களையும், தொழிற்சங்க பிரதிநிதிகளையும், உத்தியோகததர்களையும் இன்று காலை 9.00 மணிக்கு கோண்டாவில் டிப்போவில் தவறாது சமுகம் அளிக்கும்படி பொதுமுகாமையாளர் கேட்டுள்ளார்.

## உதைபந்தாட்டம்

யாழ் மாவட்டப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 2 30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் 17வயது பிரிவு- ஹாட்லிக்கல்லூரியை எதிர்த்து புனித ஜோசப் மகாவிததியாலயம் மோதும்.

## புதிய முகாம்கள்

மட்டக்களப்புமதுரஸ் குளத்தில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம் அகற்றப்பட்டு பாலையடிவட்டை, வெல்லாவெளி, வக்கி எல்லை ஆகிய இடங்களில் புதிதாக விசேட அதிரடிப்படை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை கடந்த 16ஆம் திகதி அமைக்கப்பட்டன.

காணாமல் போனோர் பற்றிய

# கொழும்பு கண்காட்சியில் 35 ஆயிரம் பெற்றோர்

(கொழும்பு)

காணாமல் போனவர்கள் பெற்றோர், உறவினரின் சங்கத்தில், காணப் போனவர்கள் பற்றிய கண்காட்சி நேற்று கொழும்பு மத்திய புத்தகசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இதில சுமார் 35 ஆயிரத்திறகு மேற்பட்ட பெற்றோர் கலநது கொண்டனர். இவர்கள் தமது பிளளைகளின் நினைவாக அழுது புலம்பியதை காணக்கூடியதாக இருந்தது. இக் கணகாட்சியில் பெரும் அளவில் இளைஞர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடததக்கது.

# புலிகளின்குரல் வானொலி 3-ம் ஆண்டு நிறைவு

போட்டிகளில் பரிசு பெற்றோர் விபரம்

புலிகளின்குரல் வானொலியின் மூன்றாமாண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் பரிசு பெற்றவர்களின்விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவர்களுக்கான பரிசுகள் நாளை சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி ம. விததியாலயத்தில் நடைபெறும் கலைஞர்களுக்கான ஒன்று கூடலில் வழங்கபபட இருக்கின்றன.

இப்போட்டிகளில் பரிசுபெற்றவர்களின் விபரங்கள் வருமாறு:-

நாடகம்:-

முதலாமிடம்;- திரு. இ. ரவிச்சந்திரன் எழுதிய ''சிறை''

இரண்டாமிடம்;- வல்வையூரான் எழுதிய ''அன்னை என்பவள்''

மூன்றாமிடம்:- திரு. வ. வசந்தகுமார் எழுதிய ''பொறுப்பு''

சிறுகதை:-

முதலாமிடம்:- திரு க. சிவராசா எழுதிய ''இவனும் ஒரு பங்காளி''

இரண்டாமிடம்:- திரு. வே. கிங்ஸ்லி எழுதிய ''அறுபடை அமர்க்களம''

மூன்றாமிடம்: திரு இரா. இராஜேஸ்கணணன் எழுதிய ''மனிதம் மட்டுமல்ல''

கவிதை:-

முதலாமிடம்:- செல்வி ப. நாமகள் எழுதிய ''இன்றைய மாலையில''

இரண்டாமிடம்:- திரு நிலா தமிழினதாசன் எழுதிய ''உறக்கம் விட்டு எழுவீர்''

மூன்றாமிடம்:- திரு. மு. விஜயராகவன் எழுதிய ''தாயே என்னை பிரசவிததுவிடு''

விமர்சனத்திற்கான பரிசு எவருககும் வழங்கப்படவிலலை.

## கிழக்கில்

போக்குவரத்துக்கு அரசு உத்தரவாதம அளித்துள்ளது. கிராமப் பகுதிகளில் மக்களின் பாதுகாப்புக்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை அத்துடன் கிழக்கின் பல பகுதிகள் இன்னமும் விடுவிக்கப்படாத பகுதிகள் என்பதை பாதுகாபபுப் படையினரே ஒப்புக் கொண்டு வருகின்றனர்.

மேலும் மட்டக்களப்பில் உகந்த சூழ்நிலை இல்லை என்று காரணம் காட்டி கூட்டுறவுச்சபைத தேர்தல்களைப் பின்போடுவதாகக் கூறி கூட்டுறவு உதவி ஆணையாளர் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார். இந்த நிலையில் எப்படி உள்ளூராட்சித் தேர்தலை நடாத்தமுடியும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

மேலும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடைபெறும் தேர்தலை ஒரு நீதியான நியாயமான தேர்தலாக நான் கருதவில்லை. இதனால் இத்தேர்தல்களில் நாம் கலந்து கொள்ளவில்லை என்றார்.

## யாழ்.

தரங்கு பொக்கணை ஊரெழு குடியேற்றத் திட்டத்திலும், உடுவில் வட்டத்திற்கான கருத்தரங்கு கந்தரோடை துர்க்கா சனசமூக நிலைய முன்றலிலும், சங்கானை வட்டத்தில் பணிப்புலம் அம்மன் கோவிலடியிலும், சண்டிலிப்பாய் வடடக்தில் சண்டிலிப்பாய் வடக்கிலுள்ள நரேஷ் சனசமூக நிலையத்திலும், உடுப்பிட்டி வட்டத்தில் அச்சுவேலி காட்டு விநாயகர் கோவில் சரஸ்வதி வித்தியாலயம் அருகிலும், பருத்தித்துறை வட்ட கருத்தரங்கு புலோலி தெற்கிலுள்ள மொறாவில் பிள்ளையார் கோவில் முன்பாகவும், கரவெட்டி வட்டத்தில் அல்வாய் கிழக்கு சாமணம்துறை பிள்ளையார் கோவில் முன்றலிலும், கொடிகாமம் வட்டத்தில் நாவலடி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், சாவகச்சேரி வட்டத்தில் மட்டுவில் சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்திலும், கைதடி வட்டத்தில் மறவன்புலோவில் உள்ள சகலகலாவல்லி வித்தியாலயத்திலும், தீவக கோட்டத்து கருத்தரங்குகள் யாழ். புகையிரத நிலையத்திலும், முஸ்லிம் பகுதியிலும் நடைபெறவுள்ளன. (ச)

## பரீட்சை

ளுக்கான அனுமதி அட்டைகள் உள்ளனவா என்பது பற்றி அறியமுடியவில்லை. பொதுக்கா ஆனறு உடைக்கப்பட்டாலே அனுமதி அட்டைகள் உள்ளிருக்கின்றனவா என்பது பற்றுத தெரியும என யாழ். கலவித திணைககள அதிகாரி ஒருவர் தெரிவிததார். (பா)

## ஐ. தே கட்சி

வாக்குவதற்குமே என்றும் பி. ப. ஸி. மேலும் தெரிவித்தது.

மேற்படி தேர்தல் நடைபெறுமாயின மக்களை பாதுகாப்பதற்கு பெரும் எண்ணிக்கையில படையினர் தேவைப்படுவர். வடக்கிலும், கிழக்கிலும மிகப பரந்தளவு நிலப்பரபபு விடுதலைப் புலிகளின் கட்டுபபாட்டில் உள்ளது என்றும தெரிவிக்கப்பட்டது.


யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

First Blood

(தாக்குதல் நிறைந்த சித்திரம்)

தினசரி பிற்பகல் 4 00 மணி, மாலை 6.00 மணி

சனி, ஞாயிறு காலை 10.30, பிற்பகல் 2.30, 4 00

மாலை 6.00 மணி

சி/7852)


# மரண அறிவித்தல்கள்

## நீங்காத நினைவின் ஓராண்டு



தோற்றம்: 30-11-1929

மறைவு: 01-11-1992

அமரர்

### உருத்திரபசுபதிகேதாரகௌரி

திதி வெண்பா

கேதார கௌரி உருத்ர பசுபதி  
மாதர் ஆங்கீரச கார்த்திகையின் — மீதுவரு  
பூர்வபட்ச சஷ்டிப் புகழ்த்திதியில் வானுற்றார்!  
நேர்கசதா இன்ப நிலை!

இல்லறமும் இறைபணியும் இணைய வாழ்ந்து  
நல்லறமும் நலிவுற்றோர் நிமிர வாழ்ந்து  
எல்லாம் வல்லிறை சிவன் தாள்சேர்ந்து நித்தம்  
பொல்லா வினை போக்கிப் போற்றுவமே ஆத்மா  
சாந்திபெற.

உங்கள் நினைவால் வாடும்  
குடும்பத்தினர்

143/4, பிரப்பங்குளம் ஒழுங்கை  
வண்ணார்பண்ணை,  
யாழ்ப்பாணம்.

(சி-7956)

## சுப்பையா சிவபாதசுந்தரம்

(இராசா)

திருநெல்வேலி கிழக்கு அரசடி ஒழுங்கையைச் சேர்ந்த சுப்பையா சிவபாதசுந்தரம் பாஹ்ரெனில் காலமானார். அன்னார் சுப்பையா-செவ்வந்திஅம்மா தம்பதிகளின் அன்பு மகனும் விஜயலட்சுமியின் அன்புக் கணவரும் பிரதாபன் (கனகரட்ணம் ம. ம. வித்தியாலயம்), மதீபன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19 11. 93) வெள்ளிக்கிழமை காலை 10 00 மணிக்கு திருநெலவேலியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் திருநெல்வேலி மயானத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

''பத்மாஜினி அகம்''  
அரசடி ஒழுங்கை,  
திருநெல்வேலி கிழக்கு

தகவல்  
மு. தனபாலசிங்கம்

(6628)

## திருமதி திலகவதிப்பிள்ளை சதாசிவம்

பெரியரசடி சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி திலகவதிப்பிள்ளை சதாசிவம் (இளைப்பாறிய ஆசிரியை மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்) அவர்கள் 17 11 1993 நள்ளிரவு 11.45 மணியளவில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் திரு கனகசபை சதாசிவம் (இளைப்பாறிய சாவகச்சேரி நகரசபை உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஜெகநாதன், விமலநாதன் (ஜேர்மனி), லில்லிமலர் ஜேர்மனி), திருமதி புஸ்பமலர், ரவிதாஸ் ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி மகாலஷ்மி விமலநாதன் (ஜேர்மனி), திரு. க. இரவிதாஸ் (கமநலசேவை நிலையம் புத்தூர்ச் சந்தி) ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வன் வி. விதுசனின் அன்புப் பேர்த்தியாரும், திருமதி இராசலட்சுமி தில்லைநடேசன் (இளைப்பாறிய ஆசிரியை மீசாலை வீரசிங்கம் ம வி) அவர்களின் அன்புச்சகோதரியும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 18. 11. 1993 பிற்பகல் . 00 மணியளவில் வேம்பிராய் மயானத்தில நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

பெரிய அரசடி,  
சாவகச்சேரி

தகவல்  
தி. முருகதாசன்  
[பேறாமகன்]

(6635)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.